# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 28 புதன்கிழமை (14-10-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 274


# காயமடையும் படையினருக்கு சிகிச்சை தர அமெரிக்க இராணுவ மருத்துவர்கள் குழு!

கொழும்பு, ஒக்ரோபர் 14

யுத்தத்தில் காயமடையும் படையினருக்குச் சிகிச்சையளிக்க வென அமெரிக்க இராணுவ மருத்துவர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

முதல் கட்டமாக ஐந்து அமெரிக்க டாக்டர்கள் மற்றும் ஒரு தொழில்நுட்ப வியலாளர்கள் அடங்கிய குழு ஒன்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

இலங்கை — அமெரிக்க அரசுகள் பரஸ்பரம் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் இக்குழு கொழும்பு வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தற்போது வந்துள்ள குழு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் என்றும்—

மேலும் அமெரிக்க இராணுவ மருத்துவக் குழுக்கள் இந்த ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முதலாவது அமெரிக்க இராணுவ மருத்துவக் குழுவினர் நேற்றுக் காலை சுகாதார அமைச்சு அலுவலகத்தில் வைத்து சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவைச் சந்தித்துப் பேசினர். (உ-6)

# யாழ். நீதிமன்றங்கள் நேற்று செயலிழந்தன

## சம்பந்தப்பட்டோர் கூடி முடிவு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 14

யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்கள் நேற்றுப் பிற்பகல் முதல் முற்றாகச் செயலிழந்தன.

நீதிபதிகள் மற்றும் அதிகாரிகள் கூடி நிலைமையை ஆராய்ந்த பின்னர் காலவரையறை குறிப்பிடாது நீதிமன்றச் செயற்பாடுகளை நிறுத்துவது என முடிவு செய்தனர்.

நீதிபதிகளுக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் கடிதங்களை அடுத்தே நீதிமன்றத்தைச் செயற்படுத்துவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே இவ்வாறு கிடைத்த சில கடிதங்களை அடுத்து நீதிமன்றங்கள்

[12 ஆம் பக்கம் பார்க்க]

# 'வாதுவ' கப்பல் மூலம் பயணிகளை அனுப்பும் முயற்சி கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 14

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து மீளத் திரும்பமுடியாத நிலையில் உள்ளவர்களை 'வாதுவ' கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப எடுத்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது என்று அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

இக்கப்பலை பயணிகள் சேவைக்குப் பயன்படுத்த ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டதாகவும்—

அதற்கேற்ப கப்பலில் மலசலகூடம் அமைப்பு வேலைகளுக்கு முன் முயற்சி எடுத்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## 'லங்கா முடித்த' மூலம் எதிர்வரும் 22 ஆம் திகதி பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 14

காங்கேசன்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'லங்கா முடித்த' கப்பல் இங்கிருந்து பயணிகளை திருகோணமலைக்கு ஏற்றிச் செல்லும் பணியை எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளி மாவட்டங்களுக்கு செல்ல 2,500 பேர் பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்ல 2 ஆயிரத்து 500 பேர் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

'லயன் ஏயர்' விமானம் இரணைதீவுப் பகுதியில் வீழ்ந்ததையடுத்து யாழ்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, ஒக். 14

நேற்றுமுன்தினம் அநுராதபுரத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு வைத்து 'வெற்றி உறுதி' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படைத்தளபதிகளைச் சந்தித்துப் பேசினார்.

சுமார் 4 மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் முப்படைத் தளபதிகள், பொலீஸ்மா அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர். [உ-6]

### தடுப்புக் காவலில் உள்ள

## மாநகர சபை ஊழியரை பிரதி மேயர் பார்த்தார்

கொழும்பு, ஒக். 14

யாழ். மாநகர சபைக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நால்வரையும் மாநகரசபை பிரதி மேயர் என். ரவிராஜ் தலைமையில் மாநகரசபை உறுப்பினர்கள் நேற்று பார்வையிட்டனர்.

மூல வருத்தம் காரணமாக கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மாநகர சபை பொதுமகன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன அழகி சேற்றில் சடலமாக மீட்பு!

### வல்லுறவின் பின் கொலை!!

கொழும்பு, ஒக். 14

கடந்த ஞாயிற்றுக்கிழமை முத்துவாரம் காக்கைதீவுப் பகுதியில் இனந்தெரியாத கோஷ்டியால் கடத்தப்பட்ட தமிழ்ப் பொறியியலாளர் ஒருவரின் அழகிய இளம் மனைவி நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

ஓய்வு பெற்ற பொலீஸ் அத்தியட்சகர் பி. மனோகரனின் மகனும் கடற்பொறியியலாளருமான ஜுட் மனோகரனின் மனைவி நீற்றா மனோகரன் (29 வயது) என்பவரே கொலையுண்டவராவார்.

பம்பாயைச் சேர்ந்த இப்பெண் அங்கு பெண்கள் அழகுபடுத்தும் நிலையம் ஒன்றில் (பியூட்டி பாலர்) பணிபுரிந்து

[12 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில் புலிகளின் ஹெலி?

கொழும்பு, ஒக். 14

விடுதலைப் புலிகள் வசம் இருப்பதாகக் கூறப்படும் ஹெலிகொப்டர் ஒன்று நடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிப் பகுதியில் பறந்ததா என்பது குறித்து இராணுவ உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சிக்கு மேலாக இனந் தெரியாத ஹெலி பறந்ததாகக் கூறப்படுவது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும்—

பரந்தனில் நிலை கொண்டுள்ள படையினர் இனந் தெரியாத ஹெலியை காணவில்லை என்றும்—

வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதரகத்தின் 4 அதிகாரிகள் வருகை

பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியன யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவே இந்த அதிகாரிகள் வந்துள்ளனர்.

யாழ். செயலகத்துக்கு நேற்று வந்த அந்த அதிகாரிகள் அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ். வந்த இவர்கள் நாளை மறுதினம் கொழும்பு திரும்ப இருக்கின்றனர். (உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்
## ஸ்ரீசந்திரசேகரபிள்ளையார் தேவஸ்தானம்

ஆலயக் கட்டட நிதிக்காக
தீபாவளித் திருநாளில்

## ராகம்ஸ் இசைக்குழுவினரின்
## ரம்மிய கானங்கள்

இடம்; நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்.

காலம்: 19 - 10 - 98 திங்கள் காலை 10 மணி
மாலை 3 மணி (இரு நிகழ்வுகள்)

அன்பளிப்பு ரூபா: 20/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரசுர அன்பளிப்பு:

**சத்தியா மல்ரி கோட்யார்ட்**

அழகு சாதனப் பொருள்களின் சங்கமம்.
இல. 531, பருத்தித்துறைவீதி, நல்லூர்.

(சி/5174)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## செல்லப்பா சின்னத்தங்கம்

காலஞ்சென்ற சுழிபுரம் அருணாசலப் புலவர் செல்லப்பா (மலேயன் P W D. ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவி சின்னத்தங்கம் அவர்கள் 13-10-1998 அன்று மானிப்பாயில் காலமானார்.

அன்னார் திருமதி அரியரத்தினம் இராஜலட்சுமி, செல்லப்பா பாலசிங்கம் (இளைப்பாறிய தபால் கட்டுப்பாட்டு அதிகாரி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்தம்பு அரியரட்ணம் (மோட்டார் சைக்கிள் அரியம்), திருமதி இராசநாயகி பாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை. வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லப்பா அற்புதராணி, காலஞ்சென்ற இராஜமோகன், காலஞ்சென்ற ஜெயமோகன், தர்மரட்ணம் இரத்தினராணி, இரத்தினமோகன். சந்திரமோகன், தேவதாஸ் விமலராணி, தவமோகன், அரசமோகன், ஜெகன்மோகன், அதிசயமோகன், சுரேஸ்ரூபராணி, பா. இளங்கோ. பா. பார்த்தீபன், பா. வாசுகி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று ஒரு மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
அரியரட்ணம் இராஜலட்சுமி

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

(59922)

## நடராசா சற்குணானந்தன்
(துரை)

(இந்திரா சைக்கிள் வேக்ஸ், சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த நடராசா சற்குணானந்தன் 12-10-98 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் அமரர் நடராசா, திருமதி ந. இராசமணி ஆகியோரின் அன்பு மகனும் இராசபூபதி, சண்முகானந்தன் (தபாற்கந்தோர், சாவகச்சேரி), இந்திரபூபதி, அமரர் சுகுணாதேவி ஆகியோரின் சகோதரரும் தேவமணியின் அன்புக் கணவரும், இந்துமதியின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14 10-98) புதன்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
பொ. கர்மலிங்கம்
(இ. போ. சபை)

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி/5181)

திருமதி
## புனிதவதி சண்முகரெட்ணம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை ஸ்ரீ சண்முக வித்தியாலயம் திருமலை)

புன்னாலைக் கட்டுவனை பிறப்பிடமாகவும், திருமலை 93, வித்தியாலயம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி சண்முகரெட்ணம் 13-10-98 அன்று காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் சண்முகரெட்ணத்தின் (துறைமுக கூட்டுத்தாபனம், திருமலை) அன்பு மனைவியும், செல்வி சண்முகப்பிரியாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ராஜரெட்ணம் (உதவி வைத்தியர்), கனகரெட்ணம் (ஸாம்பியா), திருமதி பங்கயற்செல்வி சிவகுமாரன் (ஆசிரியை, திருஞான சம்பந்தர் வித்தியாலயம், வட்டுக்கோட்டை), செந்தில்வல்லி, சிவகாம சுந்தரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-10-98) மாலை இல.71, 37வது ஒழுங்கை, வெள்ளவத்தை இல்லத்தில் இருந்து இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கணவர், மகள்

(59929)

## விசேட நிகழ்வுகள்

மானிப்பாய், ஒக். 14

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் யாழ். வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் விசேட நிகழ்வுகள் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளன.

(இ-90)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, ஒக். 14

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் கொடிகாமம் தெற்கு பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல்1.00மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் இ. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டியில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி சிறுவர் நன்னடத்தை அதிகாரி வே. கந்தசாமியும், கௌரவ விருந்தினர்களாகக் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் க. கந்தையா, கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ. குழந்தைவேலு, பொது முகாமையாளர் கா. மணியம் ஆகியோரும் கலந்து கொள்வார்.

(உ-117)

## கப்பல் மூலம் தேங்காய் தருவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

கடந்த ஞாயிறன்று காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த ஹெந்தல கப்பலில் 20 ஆயிரம் தேங்காய்கள் யாழ். எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். தனியார் வர்த்தகர் இருவர் தென் பகுதியிலிருந்து இவ்வாறு தேங்காய்களை எடுத்து வந்துள்ளனர்.

(உ-7)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2-30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கோட்டக்கல்வி அதிகாரி ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பலவிடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

(உ-3)

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
மம்முட்டி - அஞ்சு
விஷ்ணுவரதன் நடித்த
**சத்திரிய வம்சம்**
(ரீகல்)
நெஞ்சுஉருக்கும்காட்சிகள்
காட்சி: 10-30, 2-30
(59923)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
இரண்டாவது
வெற்றி வாரமாக
அரவிந்தசாமி
மதுபாலா • ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் • நாஸர்
நடித்த
**ரோஜா**
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00

## நன்றியுரைத்து மகிழ்கின்றேன்

இறைவன் குருவடிவாய் வந்து
அருள் புரிகின்றான். இறைவன்
கருணையினால் குருவடிவாய்
நின்று புலமைப் பரிசிற்
தேர்வில் சித்தி பெறத் துணை
நின்ற அதிபர் முதலான ஆசிரியத்
தெய்வங்களை

## நன்றியுரைத்து மகிழ்கின்றேன்

செல்வி துளசி தர்மகுலசிங்கம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
யாழ்ப்பாணம்.

(59927)

# UNDP / JRRP

UNDP with additional funds from the Swedish Government is supporting GOSL / RRAN initiatives in Rural Health coordinated through existing Health Authorities. This work requires a full-time facilitator working jointly with UNDP/JRRP and the Rural Health Steering Committee to insure the delivery and sustainability of planned activities.

The workload will be heavy at times and travel around the Peninsula required. Best candidates will have an abundance of energy, a willingness to see the job through, and a basic understanding of health issues and/ or related planning/ project-management skills. Additionally the candidate must be self-motivated and demonstrate the ability to take the initiative when necessary.

Specifically the candidate should:

- ☐ Be a graduate and/ or have related experience.
- ☐ Have basic computer skills.
- ☐ Good written and spoken English skills.
- ☐ Ability/willingness to operate a motorbike/scooter.

The position is fulltime, but temporary and casual in nature with an expected initial period of employment of 6—18 months. The successful applicant who then completes this assignment will be well prepared for other activities that may be generated in the rehabilitation process that continues in Jaffna and would be well placed and connected to secure follow-up work.

Applications should be marked for:

Health Facilitator Position
UNDP/JRRP
125, Temple Road, Jaffna.

Applications with CV's should arrive by
Sunday October 25 th 1998.

Only short-listed Candidates will be notified.

(59915)

# UNDP / JRRP

UNDP / JRRP has undertaken several construction rehabilitation activities in the Jaffna peninsula and expects to do several more. We require the casual services of a qualified Civil Engineer to do technical drawings, develop Tender Documents from Bills of quantity and to monitor work performed.

The Workload will be heavy at times and travel around the Peninsula required.

Specifically the candidate should:

- ☐ Be a qualified Civil Engineer
- ☐ Five years of experience
- ☐ Good written and spoken English skills
- ☐ Ability / willingness to operate a motorbike / scootor
- ☐ Computer skills will be learned as part of the work — prior experience helpful.

The position is fulltime, but temporary and casual in nature with an expected initial period of employment on a daily basis for up to 15 months.

Applications should be marked for:

Civil Engineer Position
UNDP / JRRP
125, Temple Road, Jaffna.

Applications with CV's should arrive by
Sunday October 25th 1998

Only short - listed candidates will be notitied

(59916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகள் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

கின்ஷாசா, ஒக். 14

கொங்கோவில் பயணிகள் விமானம் ஒன்று கிளர்ச்சிவாதிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இந்தசம்பவத்தில் 40-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

தனியாருக்குச் சொந்தமான போயிங் 727 என்ற இந்த விமானம் கொங்கோவின் ஹிண்டு பகுதியிலேயே சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

விமானத்தில் பொது மக்களா அல்லது இராணுவத்தினரா பயணம் செய்தார்கள் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

ஹிண்டுப் பகுதியைக் கைப்பற்றும் சண்டையில் கொங்கோ படையினரும் கிளர்ச்சிவாதிகளும் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

# கொசோவோ பிரச்சினைத் தீர்வுக்கு யூகோவுக்கு நான்கு நாள் அவகாசம்!

## கிளின்ரனுக்கு மிலோசேவிக் முக்கிய உறுதி மொழி

பெல்கிரேட், ஒக்: 14

யூகோஸ்லாவியா மீது நேட்டோ நடத்தவிருந்த தாக்குதல் அமெரிக்க அதிபரில் கிளின்ரனுக்கு யூகோஸ்லாவிய அதிபர் மிலோசேவிக் அளித்த முக்கிய வாக்குறுதிகளை அடுத்து ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் நேட்டோ நாடுகளின் தூதுவர்கள் நேற்று முக்கிய கூட்டம் நடத்தி யூகோஸ்லாவியா மீதான தாக்குதலுக்கு பச்சைக் கொடி காட்டிய ஒரு சில மணி நேரத்துக்குள் அமெரிக்க அதிபருக்கு யூகோ அதிபர் அளித்த வாக்குறுதி காரணமாக பிரச்சினையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கொசோவோ பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதற்கு சில முக்கிய வாக்குறுதிகளை யூகோ அதிபர் அளித்துள்ளதாக பில் கிளின்ரன் நேற்று தனது ரெலிவிஷன் உரையில் தெரிவித்தார்.

யூகோ அதிபர் தனது உறுதி மொழிகளை நிறைவேற்ற அவருக்கு நான்கு நாள் அவகாசம் அளிப்பது என பிரசல்ஸில் கூடிய நேட்டோ நாடுகளின் தூதுவர்கள் முடிவு செய்தனர்.

கொசோவோவில் அல்பேனிய இனத்தவர்கள் சேர்பியப் படைகளால் பெரும் அளவு இனசங்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து படைவாபஸுக்கு ஐ.நா. பாதுகாப்புச்சபை உத்தரவிட்டது.

யூகோஸ்லாவியா இதனை ஏற்க மறுத்தபோதே படை நடவடிக்கைக்கு நேட்டோ நாடுகள் தயாராகி வந்தன. (இ-)

## டில்லி முதல்வராக சுஷ்மா சுவராஜ்!

புதுடில்லி, ஒக். 14

புதுடில்லி முதலமைச்சராக திருமதி சுஷ்மா சுவராஜ் ஆளுநர் முன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த சனிக்கிழமை பிரதமர் வாஜ்பாயின் இல்லத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் போது சுஷ்மா சுவராஜை முதலமைச்சராக நியமிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

இதுவரை முதலமைச்சராக இருந்த விரத்சிங் வசுமா கட்சித் தலைமைப் பீடத்தின் பணிப்பின் பிரகாரம் பதவியை ஏற்றுள்ளார்.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ளது.

அந்தத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியின் வெற்றிக்கு திருமதி சுஷ்மா சுவராஜின் பங்களிப்பு அவசியமானது என்று பாரதீய ஜனதாகட்சியின் தலைமைப் பீடம் கருதுகிறது.

1993 ஆம் ஆண்டு டில்லிக்கு சட்டப் பேரவை அந்தஸ்து வழங்கப்பட்டது.

அதன்பின்னர் பதவி ஏற்ற மூன்றாவது முதலமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் ஆவார். (இ-8-ரி)

## நியூசிலாந்தில் தாராள குடிவரவுக் கொள்கை

நியூசிலாந்து தனது குடிவரவு சம்பந்தமான கட்டுப்பாடுகளை நீக்கி புதிய தாராளமய குடிவரவுக் கொள்கையை அமுல்படுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நியூசிலாந்தில் குடியேறுவோர், கல்வித்தகமை, ஆங்கில அறிவு, தொழில் அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக குடிவரவு அமைச்சர் டுவாரிகி டெலாமிரி அறிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஷங்காய், மொஸ்கோ, பிரியோலியா ஆகிய இடங்களிலும் புதிய அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜன்ரீனா, பிரேசில், சிலி, உருகுவே போன்ற நாடுகளைச் சேர்ந்தோர் வீசா இன்றியே நியூசிலாந்திற்குச் செல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

## பாகிஸ்தானில் கடுமையான இஸ்லாமியச் சட்டங்கள்

### எதிர்க்கட்சி ஆதரவை ஷெரீப் கோருகிறார்

இஸ்லாமாபாத், ஒக்: 14

"பாகிஸ்தான் உண்மையாக இஸ்லாமிய நாடாக மாற வேண்டுமானால் ஷரிஅத் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு அது நாட்டின் உயரிய சட்டமாக வர வேண்டும். இதற்கு எதிர்க்கட்சிகள் தமது ஆதரவைத் தரவேண்டும்".

பிரதமர் நவாஸ்ஷெரீப் இவ்வாறு தெரிவித்தார்.

ஷரிஅத் சட்டத்தை நாட்டில் அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் கொலை, கொள்ளை, நீதியின்மை யாவும் நீங்கிபுதியஇஸ்லாமிய ஜனநாயக நாடாக பாகிஸ்தான் மாறும் என்றும் அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஷரிஅத் சட்டம் தொடர்பான பிரேரணை பாகிஸ்தானின் கீழ்ச் சபையில் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்த கிழமை மேற் சபையின் அங்கீகாரத்திற்கு இது விடப்படும். இந்தச்சட்டம் நிறைவேற மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை.

ஆனால் ஷெரீப்பின் ஆதரவாளர்களும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களும் மேற்சபையில் சமபலத்தில் உள்ளனர்.

எனவேதான் சட்டத்தை ஆதரிக்குமாறு எதிர்க்கட்சியினருக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். (இ-ரி)

உலக அரங்கில்

## ஆயிரக்கணக்கான வீடுகள் இஸ்ரேலில் தீயில்

### ஹைபா நகரில் சம்பவம்

ஜெருஸலேம், ஒக்: 14

இஸ்ரேலில் தீ விபத்து ஏற்பட்டதில் ஆயிரக்கணக்கான வீடுகள் எரிந்துள்ளன. 500 ஏக்கர் காட்டுப் பகுதியும் அழிந்துள்ளது.

இஸ்ரேலிய துறைமுக நகரான ஹைபாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த தீவிபத்து ஏற்பட்டது.

இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள் இன்றி பாதுகாப்புத் தேடி அலைகின்றனர்.

சம்பவம் நடந்த இடத்தில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள இராணுவமும், பொலீஸும் ஈடுபட்டுள்ளன.

இஸ்ரேலில் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் மீட்புப் பணி இதுவே என தெரிவிக்கப்படுகிறது. [இ-ரி]

## அரசுக்கு வந்த ஆயுதங்கள் அபகரிப்பு

கின்ஷாசா, ஒக்: 14

கொங்கோ ஜனநாயகக் குடியரசுக்கு எனக் கப்பலில் கொண்டு வரப்பட்ட 300 தொன்னுக்கும் அதிகமான ஆயுதங்கள் கிளர்சிக்காரர்களால் டார்டுஸ் சலாம் துறைமுகத்தில் வைத்துக் கொள்ளையிடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

# மத்தியில் பாரதீய ஜனதா அரசுக்கான ஆதரவை விலக்கப்போவது இல்லை

## ஜெயலலிதா அறிவிப்பு

புதுடில்லி, ஒக். 14

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் அரசாங்கத்துக்கு தற்போதைக்கு ஆபத்து எதுவுமில்லை என்றும் தனது கட்சி வாஜ்பாய் அரசுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதில் உறுதிப்பாடு கொண்டிருக்கிறது என்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா கூறியிருக்கிறார். மீண்டும் ஒரு தேர்தல் வருமானால் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பதென்பதை நான்தான் தீர்மானிப்பேன். சோனியாகாந்தியின் காங்கிரஸ்கட்சியுடனோ அல்லது ஜி.கே. மூப்பனாரின் தமிழ் மாநிலகாங்கிரஸுடனோ கூட எதிர்காலத்தில் கூட்டுச் சேரும் சாத்தியத்தை நிராகரிப்பதற்கில்லை என்றும் ஜெயலலிதா கூறினார்.

இந்தியப் பத்திரிகையாளர் கழகத்தினால் புதுடில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் கலந்து கொண்ட போது ஜெயலலிதா மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

மத்திய அரசுக்கு நான் தொடர்ச்சியாக அச்சுறுத்தலை விடுக்கவே இல்லை. ஆரம்பத்தில் இருந்தே பத்திரிகைகள்தான் மத்திய அரசாங்கத்தை வீழ்த்த நான் விரும்புகிறேன் என்று வீணான செய்திகளை வெளியிட்டு வந்துள்ளன.

மத்திய அரசுக்கு ஆதரவைத் தொடர்ந்து அளிப்பதற்கோ அல்லது ஆதரவை வாபஸ் பெறுவதற்கோ அடியெல்லை என்று ஒன்று இருக்க முடியாது. நாட்டுமக்களுக்கு ஏதாவது நன்மையைச் செய்யமுடியும் என்ற நம்பிக்கையில்தான் நாம் பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவு அளிக்கத் தீர்மானித்தோம்.

மத்தியில் உள்ள பாரதீய ஜனதா அரசுக்கு நான் ஒரு போதும் அச்சுறுத்தலை விடுக்கவில்லை. ஆனால் தமிழ் நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக நிற்கின்றேன். எனக்கு எதிராக பல ஊழல் வழக்குகள் போடப்பட்டிருப்பதன் காரணத்தினால்தான் நான் அரசியலில் மூர்க்கத்தனமாக நடந்து கொள்வதாகச் சிலர் கூறுகிறார்கள். வழக்குகளை எதிர்த்துப் போராட நான் எவரதும் ஆதரவையோ, அனுதாபத்தையோ, உதவியையோ நாடி நிற்கவில்லை. எனக்கு உதவ விரும்பினால்கூட மத்திய அரசாங்கத்தினால் அதைச் செய்யமுடியாது. சட்ட ஏற்பாடுகளின் பிரகாரமே நான் வழக்குகளை எதிர்த்துப் போராட வேண்டும். வேறு வழி இல்லை.

இப்படி ஜெயலலிதா கூறினார்.

மிக மோசமான ஊழல் முதலமைச்சர் என்ற பெருமை உங்களுக்கு இருக்கிறதா என்று பத்திரிகையாளர் ஒருவர்கேட்டபோது, இது மிகவும் மோசமான கேள்வி தமிழ்நாடு மாநில அரசுக்குத் தலைமை தாங்கும் எனது அரசியல் எதிரிகளாலேயே எனக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்று சற்று ஆத்திரத்துடன் ஜெயலலிதா பதிலளித்தார்.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைப்பதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் தான் பீஹாரில் ராப்ரி தேவியின் அரசைக் கலைப்பதற்கான எந்த நடவடிக்கையையும் நான் ஆதரிப்பேன்.

ஆப்கானிஸ்தானில் மறைந்திருக்கும் சவுதி இஸ்லாமிய தீவிரவாதி ஓசாமா பின்லாடனின் கரங்கள் பெப்ரவரியில் கோயம்புத்தூரில் இடம் பெற்ற தொடர்ச்சியான பல குண்டு வெடிப்புகளின் பின்னணியில் இருக்கின்றன என்று முக்கியமான தகவல்கள் எமக்கு கிடைத்திருக்கின்றன.

தமிழகத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஊடுருவலை முதலமைச்சர் கருணாநிதி ஊக்குவிக்கிறார் என்பது வெளிப்படையானது. தேசிய ஐக்கியத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் எந்தவொரு பயங்கரவாத வன்முறை குறித்தும் இந்திய மத்திய புலனாய்வுப் பணியகம் விசாரணை நடத்துவதற்கு மத்திய அரசு உத்தரவிடுவதற்கேதுவாக சட்டத்தைத் திருத்த வேண்டும்.

இப்படிமேலும் கூறினார்.

## மருத்துவத் துறையில் நோபல் பரிசு

வாஷிங்ரன், ஒக்: 14

அமெரிக்க மருந்தியலாளர்கள் மூவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக காற்றில் கலந்துள்ளதும் —

நைதரசன்-20 ஆல் ஏற்படுவதுமான —

நைதரசன் ஒக்சைட் வாயு செயற்படும் விதம் குறித்து இவர்கள் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்பே இவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

நரம்பு மண்டலத்துக்கு இந்த வாயு எவ்வாறு சமிக்ஞைகளை அனுப்புகின்றது என்று இவர்கள் அளித்த விளக்கத்தினால் இருதய நோய் முதல் ஆண்மைக் குறைவு வரையிலான நோய்க் குறைபாடுகளுக்கான புதிய மருந்துகள் பற்றிய ஆய்வுக்கு வழி பிறந்துள்ளது.

றோபட் பர்த்வோக்ஸ், லூயிஸ் இக்னால்றோ, பெரீக்றுஹா ஆகிய இந்த மூன்று அமெரிக்கர்களும் 10 லட்சம் டொலர் பெறுமதியான இப்பரிசினைப் பெற்றுள்ளனர். (இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி நெறி

வட்டுக்கோட்டை
தென்னிந்திய அத்தியட்சாதீன
பெண்கள் ஐக்கிய சங்கத்தினரால்
நடத்தப்படும்
பயிற்சி நிலையம் ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சி பெற விரும்பும் பெண்கள் தங்களது விண்ணப்பங்களை, வட்டுக்கோட்டை சபைப் போதகரிடம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கற்பிக்கப்படும் பாடங்கள்

1. தையல்
2. நூல் வேலை
3. ஐசிங்
4. மனையியல்
5. பன்னவேலை
6. தும்புவேலை
7. பூ வேலை
8. நுணுக்கமான கைவேலை

விண்ணப்பங்களை ஐப்பசி 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்
பெண்கள் ஐக்கிய சங்கம்

(சி-5172)

## 100 வீடுகளை கட்டுவதற்கு உதவி

யாழ்ப்பாணம், ஒக், 14

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் அண்மைக்கால அசம்பாவிதங்களின் போது முற்றாக அழிவடைந்த 100 வீடுகள் மீண்டும் புதிதாகக் கட்டப்படவுள்ளன.

கொக்குவில், அரியாலை, மற்றும் கோண்டாவில் ஆகிய கிராமங்களிலேயே சேதமடைந்த வீடுகள் மீண்டும் கட்டப்படவுள்ளன.

மேற்படி வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான பொருள்களையே ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கும் எனவும் —

அடுத்தமாதம்முதல் வாரத்தில் வீடுகளைக் கட்டும் வேலைகள் ஆரம்பமாகும் எனவும் — நல்லூர்ப்பிரதேச செயலக உதவித்திட்டமிடற் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## சிறுவர் புத்தகக்கண்காட்சி

திருநெல்வேலி, ஒக்: 14

நல்லூர்ப்பிரதேசசபையின் கொக்குவில் பொது நூலகத்தில் சிறுவர் புத்தகக் கண்காட்சி கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெற்றது.

பெரும் எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் இதனைப் பார்வையிட்டனர்.

நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் கே. மணிபல்லவராஜன் கடந்த 5ஆம் திகதி இக்கண்காட்சியை திறந்து வைத்தார். காலை 9 மணி முதல் பிற்பகல் 4 30 வரை நடைபெற்ற இக்கண்காட்சியில் சிறுவருக்கான விசேட படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. (இ-135)

## யாழ். நகரில் டீசலுக்கு தட்டுப்பாடு

அரியாலை, ஒக்: 14

யாழ். நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் விற்பனை நிலையங்களில் கடந்த இரு தினங்களாக டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் டீசல் கையிருப்பு முடிவடைந்திருப்பதாலேயே நகரில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கான டீசல் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (இ-17)

## மருந்தகம் புனரமைப்பு

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள அம்பன் மத்திய மருந்தகம் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் அனுசரணையுடனும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடனும் புனரமைக்கப்படவுள்ளது. [இ-36]

## நன்றி நவிலல்

11 - 10 - 98 ஞாயிற்றுக்கிழமை நடந்த கௌரவிப்பு விழாவில் என்னையும் கௌரவித்து விருது வழங்கிய

**யாழ். இந்து சமயப் பேரவைக்கு**

எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் அன்றைய விழாவில் என்னைக் கௌரவித்து பதக்கங்கள், பாராட்டுப் பத்திரங்கள் வழங்கியும் மாலைகள் அணிவித்தும், பொன்னாடை போர்த்தியும் வாழ்த்துக்கள் வழங்கிய ஏனையோருக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி!

திரு. சு. பாஸ்கரன் ஆச்சாரியார்,
(சிற்பகலா ஞான பானு)
இல. 479 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம.

[59898]

## நல்லூர் பிரதேச செயலக முதியோர் தினம்

யாழ்ப்பாணம், ஒக்: 14

நல்லூர் பிரதேச செயலகம் முதியோர்தினம் மற்றும் சிறுவர் தினங்களை அடுத்த வார இறுதியில் நடத்தவுள்ளது.

மேற்படி தினங்களை முன்விட்டு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையேகட்டுரைப்போட்டியும் நடத்தப்படவுள்ளது.

கட்டுரைப்போட்டிதொடர்பான அறிவுறுத்தல்களும், தலையங்கங்களும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

கட்டுரைகள் யாவும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும் சமூக சேவை உத்தியோகத்தர் செ. யோகானந்தராஜா தெரிவித்துள்ளார். (இ-7)

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக
கலாநிதிப்பட்டம் பெற்ற அரியாலையூர்

**உயர்திரு. தா. சோமசேகரம்**

(90 இல் ஸ்ரீலங்கா சிகாமணிப் பட்டம் பெற்றவர்)

அவர்களை வாழ்த்துவதோடு தகுதியை இனங்கண்ட யாழ். பல்கலைக் கழகத்தையும் பாராட்டுகின்றோம்.

அரியாலை மக்கள் சார்பில்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய.
அரியாலை 79 ஆவது சுதேசிய திருநாள்
கொண்டாட்ட விழா நிர்வாகிகள்.

(59910)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களப் பொறியியலாளர்
செல்வி வசந்தி குலவீரசிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி

**பரமேஸ்வரி குலவீரசிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்களும்,
மற்றும் ஊழியர்களும்.

கட்டடத்திணைக்களம்
யாழ்ப்பாணம்.

(59917)

ஜே. ம. சு.

## 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்



தாயின் மடியில்
27 — 09 — 1900

இறைவன் அடியில்
17 — 09 — 1998

அமரர்

**அல்பிறெட் போல் எதிர்மன்னசிங்கி**

[இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் P. W. D.]
- நீதி மன்ற ஏல விற்பனையாளர்

மாதம் ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
எமக்கெல்லாம் வழிகாட்டும் சுடரொளியாய்-
நின்றவரே.

இறைவன் ஒளியில் ஒளியாய்க் கலந்தீரே -

எமது தந்தையின் மரணத்தின்போது அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், ஆறுதல் வார்த்தை கூறியவர்கள், மற்றும் பல வழிகளிலும் எமது துயரில் பங்கு கொண்டவர்கள் யாவருக்கும் யாழ்/ஆயர் இல்லத்தவர்களுக்கும், கன்னியர் மட இல்லத்தவர்களுக்கும், மற்றும் சகல அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகளுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

17 - 10 - 98 சனிக்கிழமை காலை 6. 30 மணிக்கு (புதிய நேரம்) கோவில் வீதியிலிருக்கும் அருள் ஆச்சிரமத்தில் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி நடைபெறும். அத் திருப்பலியில் பங்கு பற்றி, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்கும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், சகோதரர்,
மைத்துனிமார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உறவினர்கள்.

14, டேவிட் றோட், யாழ்ப்பாணம். [59902]

## தாங்கியில் ஏறியவர் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக்: 14

தண்ணீர்தாங்கியில், நீர் இருக்கிறதா எனப்பார்க்க ஏறிய இளைஞன் தவறி விழுந்து காயமடைந்தார்.

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகாலிங்கம் ஸ்ரீகாந்தன் (வயது 22) என்பவரே காயமடைந்தார்.

காய மடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)


## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

**AL 99 DAY**

கணக்கீடு:-
திரு. கொலின்ஸ்


பொருளியல்: திரு. சண்

வணிகக்கல்வி:-
திரு முரளி

ஆரம்பம் 16 - 10 - 98
வெள்ளி - 10 மணி

(59899)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
21 — 05 — 1907

மறைவு
14 — 09 — 1998

திருமதி

**கற்பகம் தம்பிப்பிள்ளை**

அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் உறைவிடமாய் எங்களை எல்லாம் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அத்துடன் 14-10-98 காலை 9-00 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைக்கிறோம்.

மகள், மருமகள், சகோதரி.

56/24, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

(59911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவிக்கப்பட்ட புதிய ரக விதை நெல்

# பானையில் இட அல்ல, பயன்பெறவே

## கெயர் அதிகாரி விளக்கம்

வலி: தென்மேற்கு, ஒக்: 14

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய ரக விதை நெல் குற்றுவதற்கோ அல்லது பானையில் வைப்பதற்கோ தரப்படவில்லை; பெரும்போகத்துக்கு அனைவரும் பயன் பெறக்கூடிய வகையில் விதைநெல்லை விநியோகிப்பதே எமது நோக்கம் ஆகும்;

இவ்வாறு ''கெயர்'' ஸ்தாபன விவசாய பயிற்சி உதவியாளர் எஸ். ராஜலிங்கம் தெரிவித்தார்;

நவாலி விவசாயிகள் சம்மேளன விவசாயிகளுக்கு இரண்டாவது தொகுதியாக வழங்கப்பட்ட 'விதைநெல்' விநியோகத்திலேயே இவ்வாறு அவர் கூறினார்;

விதைநெல்லைப் பெற்ற விவசாயிகளுக்கு நமது ஸ்தாபனத்தின் ஊடாக விரைவில் ''விவசாய நெற்பயிற்சி'' நெறி ஒன்றை வழங்கவுள்ளோம்;

அதில் விவசாயிகள் கூடிய அளவு நெற்பயிர்ச்செய்கை தொடர்பான அறிவைப் பெறுவார்கள்;

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

விதைநெல் வழங்கும் வைபவத்தில் நவாலி வடக்கு கிராம அலுவலர் அ; தனபாலரத்தினமும் கலந்துகொண்டார்; (இ-185)

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சை நிபுணர்

## மாதம் 2தடவை பணிபுரிவார்

நெல்லியடி, ஒக்; 14

யாழ்: போதனா மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் அ; தயானன் மந்திகை மருத்துவ மனையில் சத்திர சிகிச்சை நிபுணராகவும் பணி புரியவுள்ளார்;

மந்திகை வைத்தியசாலையில் பல வருட காலமாக சத்திர சிகிச்சைநிபுணர் இன்மையால், கர்ப்பிணித் தாய்மார்களும், வேறுபல சத்திர சிகிச்சைக்குரிய நோயாளிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர்;

இதன் காரணமாகவே, மாதத்தில் இரு தடவைகள் மட்டும், டாக்டர் அ; தயானன் மந்திகை மருத்துவ மனையில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது; (இ-109)

# சந்தேக நபர்கள் மூவரும் பிணையிற்செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஒக்; 14

சுன்னாகத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற கொலை ஒன்று தொடர்பாக ஒருவருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் வவுனியா மேல் நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் தலா 10 ஆயிரம் ரூபாசரீரப்பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

1997 செப்ரெம்பர் 14 ஆம் திகதி சுன்னாகத்தில் பொன்னர் கதிரவேலு (47 வயது) என்பவரை அடித்துக் கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச்சேர்ந்த சி. நவரத்தினம் (47 வயது), ந; பிரதீஸ்வரன் (18 வயது), ந; சாகீஸ்வரன் (24 வயது) ஆகிய தந்தையும், பிள்ளைகளும் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தனர்;

வவுனியா மேல் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் ஒருவருடத்தின் பின் நேற்று முன்தினம் மேற்படி நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மல்லாகம் நீதிமன்றத்தில் வைத்து பிணையில் விடுவிக்கப்பட்டனர்;

அடுத்த தவணைக்கு நவம்பர் 23 ஆம் திகதி யாழ்; மேல் நீதிமன்றத்தில் மூவரையும் அஜராகுமாறு நீதிவான் மு; திருநாவுக்கரசு உத்தரவிட்டார்; (இ-5)

# மருந்துக் கலவையாளர் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக்; 14

மருந்துக் கலவையாளர் தரம் 'III' 'ஆ' பிரிவு வினைத்திறமை காண் தடைப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந்தப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தமது அனுமதி அட்டைகளை எதிர்வரும் சனிக்கிழமை சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# கல்முனைக் கரையோரம் துர்நாற்றம் வீசுகிறது

## மீனவர்கள் தெரிவிப்பு

கல்முனைக் கடற்கரையோரங்களில் துர்நாற்றம் வீசுவதாக இப்பகுதிக் கடலில் மீன்பிடிக்கச் சென்று திரும்பிய குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 29 ஆம்திகதி பலாலியில் இருந்து கொழும்புக்குச்சென்று கொண்டிருந்த சமயம் இரணைதீவுக் கடலில் வீழ்ந்து நொருங்கிய 'லயன் ஏயர்' விமானத்தில் பயணம் செய்தவர்களின் பல சடலங்கள்கல்முனைக் கடற்கரையில் ஒதுங்கின; அவற்றில் பல அந்த இடங்களிலேயே புதைக்கப்பட்டன; புதைக்கப்பட்ட குழிகளை மிருகங்கள் தோண்டியதால் இவ்வாறு துர்நாற்றம் வீசு இடமுண்டு என்று மீனவர்கள் கருதுகிறார்கள். (ஐ-51)

## புலமைப் பரிசில் பரீட்சை

# பம்பலப்பிட்டி இந்துவில் 87 மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்; 14

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலிருந்து இம்முறை புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 162 மாணவர்களில் 87 பேர் சித்தியடைந்துள்ளனர் என அந்தக் கல்லூரியின் அதிபர் தெரிவித்தார்;

கொழும்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தை என்; பிரசாத் (170 புள்ளிகள்), 4 ஆம் இடத்தை வி; சத்தியன் (164 புள்ளிகள்), 8 ஆம் இடத்தை ஏ. அரவிந்த் (162 புள்ளிகள்) ஆகியோர் பெற்றனர்; கொழும்பு மாவட்ட வெட்டுப்புள்ளி 114 என்பது குறிப்பிடத்தக்கது

இதேசமயம் யாழ். மத்திய கல்லூரியில் ஆறு மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்ததாக அதன் அதிபர் தெரிவித்தார்; (உ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் காயம்

வெவ்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்று மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் நால்வர் படுகாயமடைந்தனர்;

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து விழுந்து கே; தங்கச்சியம்மா (வயது 70) என்பவர் படுகாயமடைந்தார்; ஆவரங்காலில் இச் சம்பவம் இடம்பெற்றது;

திருநெல்வேலியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கிடையில் இடம்பெற்ற விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்களையும்ஓட்டிவந்தவர்களான நீர்வேலியைச் சேர்ந்த இராசரத்தினம் இராசேந்திரம் (வயது 37) கொக்குவிலைச் சேர்ந்த தம்பிஐயா குணசிங்கம் (வயது 47) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்;

சாவகச்சேரியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், கைதடி மதியைச் சேர்ந்தவரும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவருமான மாணிக்கம் கிருஷ்ணமூர்த்தி (வயது 38) என்பவர் படுகாயமடைந்தார்;

காயமடைந்த நால்வரும் யாழ்; ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; (இ-15)

# சந்தேகநபரை மேலும் ஒரு மாதகாலம் தடுத்துவைக்க நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 14

விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர் ஒருவரை காங்கேசன்துறை தடுப்பு முகாமில் மேலும் ஒருமாத காலம் தடுத்து வைப்பதற்கான உத்தரவை வழங்குமாறு பொலீஸார் விடுத்த வேண்டுகோளையடுத்து இதற்கான அனுமதியை மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் வழங்கியது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பூநகரிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் செல்வி தங்கராசா சாந்தினி (24 வயது, வவுனியா) என்பவர் காங்கேசன்துறையில் கடந்த இரு மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்;

மேலதிக விசாரணைகளுக்காக இவரை அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் – போக்குவரத்து வசதியில்லாத காரணத்தினால் இவரை மேலும் ஒருமாதத்திற்குத் தடுத்து வைப்பதற்கு அனுமதிக்குமாறு பொலீஸார் நீதிவானிடம் விண்ணப்பித்ததுடன் நேற்றுமுன்தினம் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்;

சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட விதம் குறித்து சட்டத்தரணிகள் பொன். பூலோகசிங்கம், கா; மு. இராதாகிருஷ்ணன் ஆகியோர் சட்டப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்கள்;

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் செய்யும் போது கைகளில் விலங்கிட்டுக் கொண்டு வருவது பாரதூரமான குற்றமாக இருப்பதுடன் இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறலாகும் என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்;

இதற்குப் பதிலளித்த பொலீஸார்கைவிலங்கு அகற்றப்பட்டால் சந்தேக நபர் தப்பி ஓடக் கூடிய வாய்ப்பு ஏற்படலாம் என்பதாலேயே அவர் இவ்வாறு கொண்டு வரப்பட்டார் என்று தெரிவித்தனர்;

குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது குறித்து பொலீஸாருக்கு அறிவுரை வழங்கிய நீதிவான் மு. திருநாவுக்கரசு இனிமேல் இவ்வாறு செய்ய வேண்டாமெனவும் கூறினார். (இ-5)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்; 14

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் கட்டடங்களைப் புனரமைப்பதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் உதவி வழங்கவுள்ளது.

இதுசம்பந்தமாக பெற்றோர் கிராமமக்கள், நலன் விரும்பிகளுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது; (இ-8)

# விண்ணப்பப் படிவங்கள்

யாழ்ப்பாணம், ஒக்; 14

முகாமைத்துவ டிப்ளோமா பகுதி நேர விரிவுரையாளர் விண்ணப்பப் படிவங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது;

மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகள் யாழ்; பிராந்திய நிலையத்திலேயே நடைபெறவுள்ளன என்று பிராந்திய இயக்குநர் ச; ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்; (இ-8)

# வெளிவாரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்; 14

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் 1996க்குரிய பொதுக் கலைமாணி, சிறப்புக்கலைமாணி, வர்த்தகமாணி ஆகிய பகுதி 1 இன் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன;

இப் பரீட்சைகளுக்கு விண்ணபபித்த பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சை கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்; வவுனியா வளாகத்திலும் பரீட்சை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது; [இ-8]

# 17% மாணவரே 6 பாடங்களில் சித்தி

# ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில்!

## காரணத்தை ஆராய வலியுறுத்து

''யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜி. சீ. ஈ; (சா; த;) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 17.6 சதவீத மாணவர்கள் மட்டுமே கடந்த ஆண்டு 6 பாடங்களில் சித்தி அடைந்துள்ளனர்; இதன் காரணம் ஆராயப்பட வேண்டும்;''

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற நூலக மேம்பாடு மற்றும் புத்தகக் கண்காட்சி நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் ஆ. இராசேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்;

வித்தியாலய அதிபர் அ; ஈஸ்வரநாதன் தலைமையில் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக் சழகம் மேற்படி வித்தியாலயத்துடன் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் அவர் [illegible] வரிலேயே மொழித்திறன் குறைவாக உள்ளது. பரீட்சைகளில் மொழிமூலமே தமது திறமையை வெளிக்காட்ட முடியும். விஞ்ஞானம் பற்றிக் கேள்வ்ஞான மூடாக ஆய்வு நடத்தப்பட்டது; வினாத்தாளின் வினாவைப் பெரும்பாலான மாணவர்களினால் புரிந்துகொள்ள முடியவில்லை; இதற்கு மொழித்திறன் குறைவே காரணமாகும்;

''பாடத்திட்டப் புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய புத்தகங்களை வாசிக்காதது இதற்கு முக்கிய காரணம்; நூலகம் மூலமே வேறு புத்தகங்களை வாசிப்பது சாத்தியமாகும்;

''இலங்கையில் உள்ள பத்தாயிரம் பாடசாலைகளில் 2 ஆயிரம் பாடசாலைகளில் மட்டுமே நூலகங்கள் உள்ளன; நூல்நிலையங்களின் தேவையை உணர்ந்து இப்போது அரசாங்கம் ஏனைய பாடசாலைகளில் அவற்றை அமைக்க முன்வந்துள்ளது;

''மாணவர்களின் இப்போதைய குறிக்கோள் 'ரியூசன்' சென்று படித்துப் பட்டம் பெற்றுப் பொருள் சட்டுவதாகவே உள்ளது; இதனால் அவர்களால் பொது அறிவைப் பெருக்க முடியவில்லை; இக்குறிக்கோளில் மாற்றம் தேவை;

''பாடசாலையின் கட்டடம், தளபாடம் அப்பாடசாலையின் உயர்வைத் தீர்மானிக்காது; கல்வியே தீர்மானிக்கும்; இந்தியாவில் நிலத்திலிருந்து படித்த ஒரு மாணவி மருத்துவப் பரீட்சையில் முதலாவதாக வந்துள்ளார்'' என்றார்;

லயன் அ; நல்லதம்பி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு; வ; கிருஷ்ணசாமி ஆகியோரும் உரையாற்றினர்;

கோ; சிவசுந்தரமூர்த்தி நன்றியுரை வழங்கினார்;

நிகழ்ச்சி முடிவில் பொது மக்கள் கண்காட்சியில் புத்தகங்களை வாங்கி நூல் நிலையத்துக்கு வழங்கினர்; (இ-154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டுநிலவயல் வரம்புகளில் சிறுதானியப் பயிர்ச் செய்கை

## தென்மராட்சி விவசாயிகளுக்கு ஆலோசனை

தென்மராட்சி, ஒக். 14

தென்மராட்சி தெற்கு - மேற்குப் பகுதிகளான தவசிக்குளம், மறவன்புலோ, கோவிலாக்கண்டி, நாவற்குழி ஆகிய பகுதிகளில் காலபோக நெற்செய்கைக்கான நெல்விதைப்பு முடிவடையும் நிலையில் உள்ளது.

நெல் விதைப்பு முடிந்து 25ஆவது நாள் களைநாசனி தெளித்த பின்னர் மேட்டு வயல் வரம்புகளில் உழுந்து, பயறு, கௌபி, சோளம் போன்ற சிறுதானியப் பயிர்களை ஒன்பது அங்குலத்திற்கு ஒன்று வீதம் நட்டுப் பயன்பெறுமாறு கைதடி கமநலக்குழு இப்பகுதி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளது.

அத்துடன் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை காலபோக நெற்செய்கை முடியும் வரைகட்டி வளர்க்குமாறும், கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டால் கமநல குழுவின் விதிகளுக்கமைய தண்டப் பணம் அறவிடுமாறும் இப்பகுதி விவசாய சம்மேளனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கமநலக் குழுத்தலைவர் தெரிவித்தார். (ஐ-117)

## வடமராட்சி கிழக்கில் கால்நடைகள் திருட்டு

செம்பியன்பற்று, ஒக். 14

வடமராட்சி கிழக்குப்பகுதியில் கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன் பகுதி மக்களது கால்நடைகள் மருதங்கேணி பாதுகாப்பு அரணைக்கடந்து நெல்லியான் கம்பி பாலத்தடிக்கு மேய்ச்சலுக்கு செல்லும்போது அப்பகுதியில் வைத்து அவை மடக்கிப்பிடிக்கப்பட்டு நாகர்கோயில் காவலரண் ஊடாக பருத்தித்துறைப் பகுதிக்கு வண்டில்களிலும், வாகனங்களிலும் ஏற்றிச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஐ-36)

## ஈவினை கிராமத்தில் இலவச திருமணப் பதிவு

வலிகாமம்தெற்கு, ஒக். 14

ஈவினைக் கிராமத்தில் விவாகப் பதிவு செய்துகொள்ளாமல் குடும்பம் நடத்தி வரும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தம்பதிகளுக்கு விவாகப் பதிவினை இலவசமாக நடத்துவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஈவினைக் கிராமத்திலுள்ள பதினொரு சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் இதனை நடத்த உள்ளனர்.

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு விவாகப் பதிவு இலவசமாகச் செய்யப்பட உள்ளது. (ஐ-152)

## வெள்ளைப் பிரம்பு தினத்தில் விழிப்புலன் இழந்தோருக்கு பொருள்கள் அன்பளிப்பு

வலிகாமம் தெற்கு, ஒக். 14

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு மானிப்பாயில் உள்ள விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லமான வாழ்வகத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு லயன்ஸ் கழகத்தினரால் பல அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம், மானிப்பாய் லயன்ஸ் கழக வட்டம், சுன்னாகம் லயன்ஸ்கழகம், கொக்குவில் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இந்த அன்பளிப்புப் பொருள்களை வழங்கவுள்ளன.

இம்மாதம் 24 ஆம் திகதி வாழ்வகப் பிள்ளைகளுக்குத் தேவையான வெள்ளைப் பிரம்புகள், படுக்கை விரிப்புகள், தலையணைகள், உணவுப் பாத்திரங்கள் போன்ற பல பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-152)

## புதுக்குடியிருப்பில் டாக்டர்கள் போராட்டம்

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர்பிரிவில் கடமையாற்றும் டாக்டர்கள் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டாக்டர்களின் போக்குவரத்துக்காக வழங்கப்பட்டு வந்த மண்எண்ணெய் வெட்டப்பட்டதைக் கண்டித்தே டாக்டர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல்சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தினசரி 700 முதல் ஆயிரம் நோயாளர்கள் வரையில் இந்த ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர். ஆனால் டாக்டர்கள் ஆரம்பித்துள்ள சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தினால் தினமும் 250 பேர் வரையில் மட்டுமே சிகிச்சை பெறக்கூடியதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கஞ்சாவுடன் வந்தவர் படையிடம் சிக்கினார்

வரணிப் பகுதியிலிருந்து சைக்கிளில் கொண்டு வரப்பட்ட பெருமளவு கஞ்சாச் செடிகள் கொடிகாமம் சந்தியில் உள்ள படையினரின் சோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டன. இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்றது.

கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இவற்றினைக் கொண்டு வந்தவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தற்கொலை

நோயின் கொடுமையினால் விரக்தியடைந்த வயோதிப மாது ஒருவர், வீட்டிலுள்ளோர் ஆலயத்திற்குப் புறப்பட்ட சமயம், தனது உடலில் தீமூட்டி எரிந்து மரணமானார்.

இச் சம்பவம் கடந்த 5ஆம் திகதி மாலை 5 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ம. கனகம்மா (வயது 70) என்பவரே இவ்விதம் மரணமானவராவார்.

மரண விசாரணையை மேற்கொண்டபருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ஆ. க. நடராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## சீமெந்து

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சமாசத்தினால் கப்பலில் தருவிக்கப்பட்ட சீமெந்து பைக்கெட்டுக்களில் பனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 140 சீமெந்துப் பைக்கெட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை பளைப் பிரதேசத்தில் முன்னுரிமை அடிப்படையில் 28 பேருக்கு தலா ஐந்து பைக்கெட்டுக்கள் வீதம் வழங்கப்படுமென சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.


# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 12 — 01 — 1905

மறைவு 16 — 09 — 1998

திருமதி

## வள்ளியம்மை அருணாசலம்

எமது தாயாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் 16-10-98 வெள்ளிக்கிழமை தும்பளை நெல்லண்டை முத்துமாரி அம்மன் தேவஸ்தான அந்தியேட்டி மடத்திலும், அதனைத் தொடர்ந்து மதியபோசனம் பருத்தித்துறை சிவன்கோயில் பர்வதவர்த்தனி கலாமண்டபத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அ. சோமசுந்தரம்பிள்ளை (மகன்),
பட்டயக் கணக்காளர்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
(59754)


# செய்திக் கொத்து

### சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம், ஒக். 14

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயம் முன்பாக அமைந்துள்ள பாலர் பகல் விடுதியின் கலைமகள் பாலர் பாடசாலைச் சிறுவர் தின விழாவும், ஆசிரியர் தின விழாவும் கடந்த ஞாயிறன்று பிற்பகல் 4 மணிக்கு சங்கிலியன் சனசமூக நிலைய மண்டபத்தில் திருமதி நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சங்கிலியன் சனசமூக நிலையத் தலைவர் தி. ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொண்டார். (ஐ)

### கடைகள் திறந்து வியாபாரம்

நெல்லியடி, ஒக். 14

தீபாவளி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நெல்லியடிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் திறந்திருக்குமென நெல்லியடி வாணிபர் கழக உபசெயலாளர் தெரிவித்துள்ளார். (இ-109)

### வாந்திபேதி பற்றி ஆலோசனைகள்

சுதுமலை, ஒக். 14

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் வீடுகளுக்குச் சென்று சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிணறுகள், மலசலகூடம் போன்றவற்றை கண்காணிப்பதுடன் குடும்பத்தவர்களுக்கு வாந்திபேதியைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான ஆலோசனைகளையும் அவர்கள் வழங்கி வருகின்றனர். (இ-139)

### நெல் விதைப்பு பாதிப்பு

செம்பியன்பற்று, ஒக். 14

வடமராட்சி கிழக்குப் பகுதியில் விதைப்பதற்கு முன் இம் முறை அதிக மழை வீழ்ச்சி ஏற்பட்டதால் அம்பன், குடத்தனைப் பகுதிவிவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இவர்களின் வயல்களில் வரம்புக்கு மேல் நீர் நிற்பதால் நெல் விதைப்பை ஆரம்பிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-36)

### அஞ்சலிக் கூட்டம்

கொழும்புத்துறை, ஒக். 14

நியாயசிரோமணி அமரர் சி. சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு சர்வதேச இந்துமத குருபீடமும், பிராமண சமாஜமும் கூட்டாக இணைந்து அண்மையில் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்தின.

கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீமான் தம்பையா சத்திரத்தில் ஸ்ரீ ஐயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சாரியர் தலைமையில் இந்தக் கூட்டம்நடைபெற்றது. (இ-30)

### குரங்குகள் அட்டகாசம்

நெல்லியடி, ஒக். 14

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கட்டைவேலி, கரவெட்டிப் பகுதிகளில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதகாலமாக இப்பகுதியிலுள்ள வீடுகளின் கூரைகள் மற்றும் பயன்தரு மரங்கள் என்பன குரங்குகளினால் சேதமாக்கப்பட்டு வருகின்றன. (இ-8-109)

### வடிசாலைக்கு நிதி ஒதுக்கீடு

அரியாலை, ஒக். 14

திக்கம் வடிசாலையின் அபிவிருத்தி வேலைகளுக்காக வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு 20 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

திக்கம் வடிசாலையிலுள்ள பல்வேறு குறைபாடுகளை வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் கே. சண்முகலிங்கம், யாழ். மாவட்ட தென்னைவள கூட்டுறவு உதவி ஆணையாளர் கா. பரநிருபசிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதுடன் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் தெரிவித்துள்ளார். (இ-17)

### உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு யுனிசெவ் நிறுவனம் சூரிய சக்தியினால் இயங்கும் குளிர்சாதனப் பெட்டிகளையும், வைத்தியசாலைகளுக்கான தளபாடங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளது. (இ-135)

### திராட்சைப் பழத்தின் விலை வீழ்ச்சி

திராட்சைப்பழத்தின் விலை குறைந்துள்ளது.

இதுவரை கிலோ 80 ரூபா முதல் 100 ரூபாவரை விற்கப்பட்ட திராட்சைப் பழம தற்பொழுது 55 ரூபாவாக விற்கப்படுகிறது. (இ-17)

### பிரதேச செயலகத்துக்கு கட்டடம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கின்றது.

பருத்தித்துறை பஸ்டிப்போவுக்கு அருகே 10 லட்சம் ரூபா செலவில்வாங்கப்பட்ட காணியிலேயே இக்கட்டடம் அமைக்கப்படவுளது. (ஐ-109)

### அதிசய பனை மரம்

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள மாமுனை பகுதியில் 8 கிளைகளுடன் அதிசய பனைமரம் ஒன்று வளர்ந்து வருகிறது.

இப் பகுதியில் உள்ள ஒருவரது வீட்டில் இப் பனை சுமார் 9 அடி வரை சாதாரண வளர்ச்சியுடன் வளர்ந்த பின்னர் தற்போது அது 8 கிளைகளாகப் பிரிந்து வளர்ந்து வருகிறது.

இந்த அதிசய பனை மரத்தை தினமும் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருகின்றனர். (ஐ-36)

### வீதி சேதம் பஸ்சேவை பாதிப்பு

இவளாலைக்கு வரும் இ. போ. ச பஸ்கள் பிரதான வீதி திருத்தப்படாமையால் இவளாலை சந்தியுடனேயே திரும்புகின்றன. இதனால் சித்திரமேழி, பத்தாவத்தை போன்ற பகுதி மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

நீண்ட காலமாகக் கற்கள் வீதியோரங்களில் பறிக்கப் பட்டும் வீதி திருத்தப்படவில்லை கற்கள் வீதி யோரங்களில் காணப்படுவதால் வாகனங்கள் விலகிச் செல்ல முடியாமல் விபத்துக்கள் ஏற்படுவதனையும் காணக் கூடியதாக உள்ளது. (ஐ-48)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தளாயில் 11புலிகள் பலி

கொழும்பு, ஒக். 14

திருகோணமலை மாவட்டம் கந்தளாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் — தகவல் ஒன்றின் பேரில் — பதுங்கியிருந்த படையினர் இரண்டு பெண் புலிகள் உட்பட பதினொரு விடுதலைப் புலிகளைச் சுட்டுக்கொன்றதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த புலிகளிடமிருந்து ஆயுதங்களும் எட்டு லட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டதாக மேலும் கூறப்பட்டது. (உ)

# விடத்தல்தீவு, மடு பகுதியில் வாந்திபேதி நோய் தீவிரம்

## உயிலங்குளம் வீதிப் போக்குவரத்துத் தடை

வவுனியா, ஒக். 14

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் வாந்திபேதி நோய் மேலும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதிகளில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வெளியிடங்களுக்கான போக்குவரத்து மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற விடத்தல்தீவு, மடு போன்ற பகுதிகளில் அதிக எண்ணிக்கையான மக்கள் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் —

இதனைக் கட்டுப்படுத்தி வாந்திபேதி நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கிலேயே போக்குவரத்து தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் —

வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட 80பேர் விடத்தில் தீவு, மடு ஆஸ்பத்திரிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுமார் 210 பேர் வரையில் கடந்த ஒரு வாரத்தில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

இதுவரையில் இரண்டு வயோதிபர்கள், 7 வயதுச் சிறுமி ஒருவர், 30 வயது குடும்பப் பெண் ஒருவர் ஆகியோர் வாந்திபேதி நோயினால் மரணமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## கொழும்பில் பலத்த மழை

கொழும்பு, ஒக். 14

தலைநகர் கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கடந்த சில தினங்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் தாழ்வான பிரதேசங்களிலும் போதிய வடிகால் வசதிகள் இல்லாத இடங்களிலும் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

பொரளை 'லேடி றிச்வே' அரச மருத்துவமனைக் கட்டடத்தின் சில பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் மருந்துக் களஞ்சியம் பாதிக்கப்பட்டிருப்பதாகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ மனைக்கு அருகே உள்ள சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா மகா வித்தியாலயத்தினுள்ளும் வெள்ளம் புகுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் வீதிகளிலும் வெள்ளம் தேங்கி உள்ளது. (ஐ-10)

## அக்கராயன் ஆஸ்பத்திரியில் வாந்திபேதி நோயாளர் விடுதி அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

கிளிநொச்சி அக்கராயன் வைத்தியசாலையில் வாந்திபேதி நோயாளர் விடுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல நோக்குக்கூட்டுறவு சங்கங்களின் நிதி உதவியுடன் வாந்திபேதி நோயாளர்கள் தங்குவதற்கான விடுதி அமைக்கப்பட்டது.

அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டரை லட்சம் ரூபாவையும், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 50 ஆயிரம் ரூபாவையும் இதற்கென உதவியாக வழங்கின.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் நிதி உதவி வழங்கியுள்ளன.


## அ'புரத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதிங்களன்று அநுராதபுரத்துக்குவிஜயம்செய்து அங்கு — போரில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் படையினரைச் சந்தித்து உரையாடி நலம் விசாரித்தார்.

ஜனாதிபதியுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர். [உ]

## ஓராண்டு நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 — 03 — 1949 | 26 — 10 — 1997 |

### அமரர் தம்பு கந்தசாமி

(உரிமையாளர், சிறி விஷ்ணு அரிசி ஆலை)

திதி: 14 - 10 - 1998

அப்பா அப்பா எம் தெய்வமே!
கண்களில் நீர் இங்கு பெருகுதப்பா
காலம் ஓராண்டானாலும் எங்கள்
கவலைகள் தான் என்றும் ஆறிடுமா
மாலவன் போல் எம் முன் வீற்றிருந்து
எம்மை மாண்புடன் வளர்த்ததை மறப்போமா?
தோன்றிடும் உங்கள் தோற்றம் எம்மை
தேம்பியழுதிட வைக்குதப்பா!

உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்.
மகன் காண்டீபன் (லண்டன்)

குடமியன், வரணி. (59881)

## 'டேர்க்கி' கிண்ண கிரிக்கெட் இறுதியாட்டம்

குருநகர், ஒக். 14

'ஈஸ்ட் வெஸ்ட்' மார்க்கெட்டிங் பிறைவேற் லிமிட்டெட் ஆதரவில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'டேர்க்கி' வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோத உள்ளது. இப்போட்டி அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரை இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி பற்றீசியன் அணியை தோற்கடித்தது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் 'சொக்ஸ்' அணி மானிப்பாய் பரிஷ் அணியை வென்றது. [ஐ-51]

## 45 ஆம் நாள் நெஞ்சை விட்டகலா நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 — 07 — 1965 | 31 — 08 — 1998 |

திருமதி
### தேன்மொழி ரதிமோகன்

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
நம் அனைவரையும்
வாழவைப்பாய் என்றெல்லவா
எண்ணியிருந்தோம்
யாருமே அறியாமல் பாழும் கிணற்றில்
உன் இன்னுயிரை பறித்தானோ
காலனவன்
நம் அனைவரையும் பரிதவிக்கவிட்டு.
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
கணவன், மகன், தம்பி, அப்பா,
மற்றும் குடும்பத்தினர்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (59840)


# மீண்டும் ஒரு மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு

வெளிநாட்டிலிருந்து பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட அனைத்து வகை புடைவைத் தினுசுகளையும் மாபெரும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்:

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை, (59874) யாழ்ப்பாணம்.



# மலிவு விற்பனை

தெரிவுக்கு முந்துங்கள்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு 06-10-98 முதல் 19-10-98 வரை

எமது ஸ்தாபனத்தில் மலிவு விற்பனை நடைபெறுமென்பதை அன்பான வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

## ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ

இல. 13,14, பெரியகடை வீதி யாழ்ப்பாணம் (59707)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எமது சங்கத்திலே வெறுமுறு உரப்பை 6500 உம், வெற்றுச் சாக்கு, 1600 உம் விற்பனைக் குண்டு; தேவையானவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் அலுவலக நேரத்தில் 20. 10. 98–க்கு முன் பார்வை யிடலாம். பொதுமுகாமை யாளர் யாழ். மாவட்ட அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல் வேலி. (சி/5165)

நகைக்கடைப் பாவனைக் குரிய சோக்கேஸ், மேசை, இரும்புக் குசன் கதிரைகள், சேதமடைந்த இரும்புப் பெட்டி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: 77, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (59862)

நல்லின ஜேசி கறவைப்பசு, இரண்டாம் சுற்று பசுக் கன்றுடன் (12 நாள் வயது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 14, குறோசர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, (கல்விக்கந்தோருக்கு அண்மையில்) யாழ்ப் பாணம். (59904)

### தவறிவிட்டது

பொ. மலலிகாதேவி என் பவருடைய தேசிய அடை யாள அட்டை (778563843 V), விசேட அடையாள அட்டை (0907008134), கடந்த 16–9–98 அன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் விஷ்ணுபவான் சைவ உணவ கம், பரமேஸ்வராச் சந்தி, எனும் முகவரியில் ஒப்படைக் கவும். (59871)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை மணியகாரன் சந்திக்கு அண் மையில் 17 பரப்பு காணி கிணற்றுடன் உடன் விற் பனைக்குண்டு, தொடர்பு; பா. சுப்பிரமணியம் சட் டத்தரணி, தும்பளை, பருத்தித்துறை. (சி-5152)

மீசாலை வடக்குப் பகுதி யில் கணபதிப்பிள்ளை புவ னேஸ்வரி என்பவருக்குச் சொந்தமான கிணறு கட்ட டங்களுடன் கூடிய 20 பரப்பு தென்னங்காணியும், கிணறு கட்டடங்களுடன் கூடிய 5 பரப்புக் காணியும் [இரு காணிகளும் அருகருகே அமைந்துள்ளன] விற்பனைக் குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, புகை யிரத நிலைய வீதி, சாவகச் சேரி. (C/5144)

### திருத்துதல்

சகலவிதமான கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத் திக் கொடுக்கப்படும். தொடர்பு: S. நாராயண சாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), யாழ்ப் பாணம். [59706]

### காணவில்லை

55707310 இலக்கத்தை உடைய புதிய கறுப்புநிற லுமாலா ஆண்கள் சைக் கிள் 10–10–98 சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கன்னாதிட்டி காளிகோயில் முன்றலில் காணாமற் போய்விட்டது. இதைத் தவ றுதலாக எடுத்துச் சென்ற வர்கள் கீழ்க் காணும் முக வரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். காளி கோயில், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (58976)

### விண்ணப்பப் படிவம்

இந்துசமய கலாசார வர வேற்பாளர் பதவிக்கான படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (59872)

### தேவை

யாழ். பல்கலைக்கழகத் துக்கு அண்மையில் மூன்று பேர் அடங்கிய குடும்பத் துக்கு வாடகைக்கு வீடு தேவை: விளம்பரதாரர் இல. 799 C/o உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம். (59868)

### இறைச்சிக் கோழிகள்

Bairaha இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறை யாகவும் கிடைக்கும். ரேஸ் வைரா புறொயிலர் குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு: Lucky Sales Center மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (59897)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்

திரு. ந. ஜெகநாதன்

அவர்களின் அன்புச் சகோதரர்

**நடராசா திருச்செல்வம்**

இறைபதம் எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(59893)

# கூறுவிலை கோரல்

லொறி வாகனத்துக்கான
மரக்கூடாரம் அமைத்தல்
[ BODY BUILDING ]

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப் பாளர் பணிமனையிலுள்ள (இல. 46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,) ரொயாட்டா டைனா (Toyota Dyna) இன லொறிக்கு மரப்பலகையினால் ஆன கூடாரம் முற்றிலும் புதிதாக அமைப்பதற்கு (Body Building) வேலைஒப்பந்த கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. இதன் பிரகாரம் கூறு விலைகளைச் சமர்ப்பிப்போர்.

அ: 14 – 10 – 98 முதல் 27 – 10 – 98 ஆம் திகதிவரை (சனி/ஞாயிறு தவிர) அலுவலக நாள்களில் பிற் பகல் 2. 30 – பிற்பகல் 4. 30 மணிவரை வாகனத் தினைப் பணிமனையில் பார்வையிடலாம்.

ஆ: மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா ஐயா யிரத்தினை (5000/–) பணிமனையில் வைப்பில் இட வேண்டும்.

இ: கூறுவிலைகளைத் தபாலுறையில் இட்டு அரக்கு வைக்கப்பட்டு 30 – 10 – 98 ஆம் திகதி பிற்பகல் 12. 30 மணிக்கு முன் எமது பணிமனையில் இதற் கென ஒதுக்கப்பட்ட பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

ஈ: கூறுவிலைகள் யாவும் 30 – 10 – 98 அன்று பிற் பகல் 12. 30 மணிக்கு பணிமனையில் வைத்து திறக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

வைத்திய கலாநிதி. க. தா. சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதாரசேவைகள், யாழ்ப்பாணம்.

(சி/5170)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 24 – 02 – 1929 | 26 – 09 – 1997 |

**அமரர் வே. நற்குணராசா**

திதி: 14 – 10 – 1998

எமது அன்புத் தெய்வமே! பாசமிகு தந்தையே! வருடம் ஒன்று எவ்வாறு ஓடி மறைந்ததுவோ! உங் கள் எண்ண அலைகள் எங்களை ஆறாத்துயரத்தில் இன்னமும் ஆழ்த்திக் கொண்டேயிருக்கின்றதே. உங் கள் ஆத்மா ஆண்டவனுடன் இரண்டறக் கலக்க வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புத்தூர்ச் சந்தி,
மீசாலை வடக்கு, கொடிகாமம். (59896)

# மின்தூண்கள் திருட்டை தடுக்க நடவடிக்கை

மின் மார்க்கங்களிலிருந்து அகற்றப்படும் பழைய மின் தூண்கள் விசமிகளால் அப கரிக்கப்படுவதைத் தடுக்க மின்சாரசபை பொலீஸாரின் உதவியை நாடியுள்ளது.

வீதியோரங்களில் கிடந்த சமயம் பல மின் தூண்கள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகப் பொலீஸாரி டம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக மின் சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய மின் கம்பங்களை நடுவதற்காகப் பழையதும் சேதமடைந்ததுமான தூண் கள் ஊழியர்களால் அகற்றப் பட்டுவருவது தெரிந்ததே. (ஐ–15)

# புகழ் பெருகி வாழ்க

யாழ். பல்கலைக்கழக
மிருதங்க விரிவுரையாளரும்,
இந்துசமயப் பேரவையால் பட்டமும், விருதும்
வழங்கிக் கௌரவிக்கப்பட்டவரும்,
எமது குருவுமாகிய
லயஞான வாரிதி

**திரு. சி. மகேந்திரன்**

அவர்களை

நீடூழிகாலம் கலைப்புகழ் பெருகி வாழ்வீர்களாகவென வாழ்த்துகின்றோம்.

கு. ஞானசுதன்,
தி. வரோதயன்.

அளவெட்டி,
நாகேஸ்வரம். (59892)

# வலிகாமம்
# வருக! பணிப்பாளரே!

உறுதியும் தெளிவும் நேர்மையும் பரிவும்
ஊக்கமும் ஓய்விலா உழைப்பும்
பொறுதியும் படைத்த பணிப்பாளராக வரும்

**உயர்திரு. V. இராசையா**

அவர்களை

வாழ்த்தி வரவேற்கின்றோம்.

சைவப்பிரகாச வித்தியாசாலை,
தெல்லிப்பழை.

(59895)

# வாழ்த்துகின்றோம்

சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களுக்கு
யாழ். பல்கலைக்கழகம்
கலாநிதிப்பட்டம்
வழங்கியதை ஒட்டி இன்று
வாழ்த்தி வழங்கும் பாமலர்

அன்பால் அரசொன்று நாட்டி நடத்திவரும்
பெண்பால் என உலகம் பேசுதம்மா – உன்போல
தூய்மைக்கார், நேர்மைக்கார், தொண்டுக்கார், பண்புக்கார்
தாய்மைக்கார், வெற்றிக்கார், ஆர்?

— சோ. ப. —

கலை இலக்கியக் களத்தினர்
சைவப்பிரகாச வித்தியாசாலையினர்
தெல்லிப்பழை. (59894)

# 12 ஆம் ஆண்டு நினைவு நாள்

## அமரர் எலியாஸ் மரியான் ஜேம்ஸ்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், சுன்னாகம்)

| மலர்வு | மறைவு |
|---|---|
| 1921 - 07 - 31 | 1986 - 10 - 14 |

"விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுவதேயன்றி அழிக்கப்படுவதில்லை"

அன்புக்குரியவரின் ஆன்ம சாந்திக்காக மல்லாகம் சதாசகாய அன்னை ஆலயத்தில் இன்று மாலை நடைபெறும் திருப்பலியில் பங்குபற்றி அன்னாருக் காக மன்றாடுமாறு திருப்பணியாளர், பொது நிலை யினர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி: பி. ஜேம்ஸ் (சுன்னாகம்),
பிள்ளைகள்: (பிரான்ஸ், இறக்குவானை, சுன்னாகம்)

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம். (சி/ 5171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனதில் இடிக்கட்டும்!

இலங்கையின் மிகப் பெரும் பிரச்சினையான இனவிவகாரத்துக்கு இராணுவ நடவடிக்கை ஊடாக மட்டும் ஒரு போதும் தீர்வு காண முடியாது. அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கண்டு விடமுடியாது.

அரசியல் விமர்சகர்கள் மற்றும் புத்திஜீவிகள் அடிக்கடி வலியுறுத்தும் கருத்து இது.

அவர்கள் மட்டுமென்ன தென்னிலங்கையைச் சேர்ந்த மக்களில் 77 சதவீதமானோரின் கருத்தும் இதுவே என்று கொழும்புப் பல்கலைக்கழகம் சுயாதீனமாக நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சினைக்கு சமாதான வழிகளை — முயற்சிகளை - மேற்கொண்டு அரசியல் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். தென்னிலங்கையைச் சேர்ந்த மக்களில் 50 சத வீதத்தினருக்கு மேற்பட்டோர் அதனை ஆதரித்தனர். அதனாலேயே அவரால் மொத்தம் 62 சதவீத வாக்குகளைப் பெற முடிந்தது.

இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வல்ல என்ற கருத்தை, தமது ஆட்சி நலம் கருதி, பதவியேற்ற ஆறு மாதங்களிலேயே ஜனாதிபதி மாற்றிவிட்டார்! அந்த மாற்றத்துக்கு அவர் போரினூடு சமாதான சமாதானத்துக்கானபோர் என்று அழகிய பெயர்களையும் சூட்டியுள்ளார்.

ஆனால் நான்கு வருடங்கள் கழிந்த போதிலும், தென்னிலங்கை மக்களில் — சிங்கள மக்களில் — மிகப்பெரும்பாலானவர் தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி போன்று மாற்றிக்கொள்ளவில்லை! இனப்பிரச்சினைக்குத்தீர்வு போரல்ல என்றே இப்போதும் கூறுகிறார்கள்!

கொழும்புப் பல்கலைக்கழகம் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவினை ஜனாதிபதியும், அரசினரும் அசட்டை செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

தமது ஆலோசகர்களின் தவறான வழிகாட்டுதலால் அல்லது தூண்டுதலால் போரினூடு சமாதானம் என்பதனை, முயலுக்கு மூன்று கால் என்று அழுங்குப் பிடியாகப் பிடிக்கவும் கூடும். முன்வைத்த காலை, வெற்றி என்று ஒன்றை அடையாமல் - காட்டாமல் — எவ்வாறு பின்வைப்பது என்றும் அரசு தயங்கலாம்.

ஆனால், தென்னிலங்கை மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே போர் தொடரப்படுகிறது என்பது தெளிவு. போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்பாத ஆயுத வியாபாரிகளின் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டு சிங்கள மக்களின் விருப்பத்துக்கு மாறாக, அதனைப் புறக்கணித்து. போரைத் தொடர்கிறார். அரச படைகளின் ஆளணி, ஆயுத பலத்தை அதிகரித்து போரைத் தீவிரமாக்கி நாட்டை அழிப்பதற்கு கங்கணம் கட்டுகிறார்.

கருத்துக் கணிப்பு சிங்கள மக்களின் விருப்பம் — அரசின்மனதில்இடிக்குமா?

# சுகாதாரப் பழக்கங்களை அலட்சியம் செய்யாதீர்கள்!

**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் சூழல், சுகாதாரம் தொற்று நோய்களைப் பெருமளவு கட்டுப்படுத்தும் அளவில் முன்னேற்றம் அடையவில்லை. மலசலகூட பாவனையில் மக்கள் முழு அளவினதாக இன்னமும் அக்கறை கொண்டிருக்கவில்லை. கிராமப் புறங்களை இதற்கு விசேட உதாரணங்களாகக் குறிப்பிடலாம். குடிதண்ணீர் மற்றும் உணவு முதலியனவற்றில் மனித மலமானது சென்று அடையக் கூடிய விதமாக மக்கள் வெளியிடங்களிலும் மலம் கழித்து வருகின்றனர். இதன் பொருட்டு வாந்திபேதி போன்ற அபாயகரமான நோய்களை மிக இலகுவாகத் தொற்றவைக்க ஏதுவாக அமைகிறது என்பது நோக்கத்தக்கது. வாந்திபேதி நோயாளி கழிக்கும் மலமானது உடனுக்குடன் மலசலகூட குழிகளைச் சென்று அடைய வேண்டியது அவசியம். நோயாளி எழுந்து நடமாடமுடியாத நிலையிலும் கூட, நோயாளியின் மலமானது உரிய முறைகளில் கிருமிநாசனி தெளிக்கப்பட்டு [லைசோல்] அல்லது சுடுசாம்பல் இடப்பட்டு மலசலகூட குழிகளில் இட வேண்டியது அவசியம். மறைமுக நோய் தொற்றுகளின் மூலம் வாந்திபேதி நோய்க் கிருமிகள் மனித வாய்க்குழிகள் ஊடாக உடலினுள் செல்கின்றன. அருகில் உள்ள நோயாளியே இதற்குக் காரணமாகின்றான்.

வீட்டு இலையான்களே வாந்திபேதி நோய்க் கிருமிகளை கொண்டு திரிந்து பரப்பும் மிக முக்கிய காவியாக காணப்படுகிறது. மற்றும் காகம், எலி, கரப்பான்பூச்சி முதலியனவும் நோயாளி கழிக்கும் மலத்தை சுகதேகி வீட்டுக்கு எடுத்துச் செல்லும் பிராணிகளாகலாம். இலையான்கள் சாணக் குவியல், மனித மலம், அழுகிய குப்பை போன்ற பொருள்கள் முதலியவற்றில் முட்டையிட்டு பெருக்க மடைகின்றன. பதினொரு நாள்கள் இவை வளர்ந்து பெருக போதுமான காலமாகும்.

உணவு, குடிநீர் முதலியவற்றை மூடிவைக்கும் முறைகள் சரிவரப்பேணப்படின் இவ்வித தொற்றுக்களை பெருமளவு தடுக்கலாம். நாம் சமைத்த உடனேயே இளஞ்சூட்டோடு உணவினை உண்ணப் பழகினால் இந்நோய்த் தொற்றுதலை பெரும்பாலும் தடுக்கலாம்.

இக் காலங்களில் கடைகளில் வாங்கப்படும் பாண் முதலிய உணவுகளை மீண்டும் ஒருமுறை அவித்து பின் உண்ணுதல் சிறந்த முறையாகும். பச்சையாக எதனையும் உண்ணுதல் இக்காலங்களில் தவிர்க்கப்படுதல் வேண்டும். கீரை, மரக்கறிகள், கிழங்கு வகை முதலிய உணவுப் பொருள்கள் நன்கு வேக வைக்கப்பட்ட பின்பே உண்ணுதல் நன்று. மலம் கழித்தபின் கைகளுக்கு சவர்க்காரம் இட்டு கழுவுதல் அவசியம். வாந்திபேதி நோய் கண்ட ஒருவரது மலத்தை வீட்டிலுள்ள வேறு ஒருவர் கையாள நேர்ந்தால் மேற்படி முறையைக் கட்டாயம் கடைப்பிடித்தல் வேண்டும். உணவு உட்கொள்ள முன்னரும் கைகளைச் சவர்க்காரமிட்டு நன்கு கழுவுதல் வேண்டும். கை நகங்கள் யாவும் ஒட்ட வெட்டப்பட்டிருப்பின் மனித மலம் மற்றும் கிருமிகள் நகங்களின் உள்ளே தங்கி இருக்க வாய்ப்பு இல்லை.

கடைகளில் திறந்த நிலையில் உணவுகள் வைத்திருத்தல் சட்டப்படி குற்றமாகும். வியாபாரிகள் எச்சரிக்கையாக கண்ணாடிப் பெட்டிகளில் மட்டும் உணவு மற்றும் பாண் முதலியவற்றைப் பேணி வைத்திருத்தல் அவசியம். கடைகளில் சாப்பிடுவதை மக்கள் குறைத்துக் கொள்ளவும்.

பச்சைத் தண்ணீர் குடிப்பதை நிறுத்தி விட்டு எல்லோரும் கொதித்து ஆறிய பின் பாதுகாக்கப்பட்ட குடிநீரையே பருகுதல் அவசியம். யாழ். பிரதேசத்தில் கிணறுகளே பிரதான குடிநீர் பெறுமிடங்கள் என்பதை நாம் அறிவோம். எனவே கிணற்று நீரை குளோரின் இட்டு சுத்திகரிப்பதை விட கொதிக்க வைத்து பருகும் முறை இலகுவானது.

பாடசாலைப் பிள்ளைகள் ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு குடிநீரைக் கொதிக்க வைத்துப்பருகமுடியும். பாலர் கல்வி நிலையங்களும் அவ்வாறே செய்ய முடியும். பல குடும்பங்கள் நீர் பெறும் கிணறுகள் மூலம் பெறப்படும் குடி தண்ணீர் தொற்று உள்ளவையாக இருக்கலாம். நீர் அள்ளுவதற்கு ஒரே வாளியை மட்டும் அனைவரும் பாவிப்பது நன்று.

மழைக் காலத்தில் மழை நீரானது நோயாளியின் மலத்தை அள்ளிச் சென்று கிணற்று நீரோடு கலக்கச் செய்யும் வாய்ப்புக்கள் உண்டு.

நமது நாட்டில் நீர் நிலைகள் யாவும் கிருமிகள் புகாதவாறு பாதுகாப்புச் செய்யப்படவில்லை; சூழல் சுகாதார ரீதியில் இன்னமும் போதிய அளவு முன்னேற்றம் அடையவில்லை.

மக்கள் தமது சுய சுத்தம் பேணும் விடயத்தில் போதிய அக்கறை காட்டுவதில்லை. எனவே பொதுச் சுகாதார மேம்பாட்டுக்கான எல்லா வழிகளிலும் முக்கியமானது வாய் மூலமான தொற்றுக்களைத் தடுத்தல் ஆகும். வாய் மூலம் பரவும் வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்த மக்களின் பங்களிப்பும் தேவை. சனசமூக நிலையங்கள், பொதுமன்றங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள் போன்ற அமைப்புக்கள் வாந்திபேதி நோய்த் தடுப்பு வேலைகளுக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்புக்களை வழங்குதல் பொருத்தமானது. கிராமங்களில் அல்லது பட்டினங்களில் நடத்தப்பட்டு வரும் சுகாதாரக் கல்வி அளிப்பு கலந்துரையாடல்களில் மக்கள் பங்கு பற்றுதல் அவசியம். ★

---

**மழையை நம்பி**

## கிருமிநாசனி தெளித்த விவசாயிகள் ஏமாற்றம்

வலி. தென்மேற்கு, ஒக். 14

வலிகாமம் பகுதியில் மழையை எதிர்பார்த்து நெற்பயிர்களின் இடையே உள்ள களைகளைக் கட்டுப்படுத்த வீசிய கிருமிநாசனி, பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழையை எதிர்பார்த்து கிருமிநாசனி தெளித்த போதும் உரிய காலத்தில் மழை பெய்யாதது விவசாயிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

தொடர்ந்து இந்த நிலைமை நீடிக்குமானால் கிருமிநாசனி தெளித்த பயிர்கள் கருகிப் போகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-185)

## நீதிமன்றுக்கு ஜெனரேற்றர்

நெல்லியடி, ஒக். 14

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதி மன்றத்துக்கு நீதி அமைச்சினால் ஜெனரேற்றர், மோட்டார் போன்றவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜெனரேற்றரின் உதவியில் மின் ஒளியும், மோட்டாரின் உதவியில் குடி தண்ணீரும் பெறக் கூடியதாக இருக்கிறதென்று, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா தெரிவித்தார்.

(இ-109)

## படிப்பகம் நிறுவப்பட்டது

மானிப்பாய், ஒக். 14

மானிப்பாய் விழிப்புலன் வலு விழந்தோர் இல்லம் என அழைக்கப்படும் வாழ்வகத்துக்கு அதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனம் படிப்பகம் ஒன்றை அன்பளிப்பாக நிறுவி வழங்கியுள்ளது.

[இ-90]

### நாளை

புரட்டாதி - 29
வியாழக்கிழமை
திதி: தசமி
முற்பகல்: 09. 23 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல் 02.15 வரை
கரிநாள்
சுபநேரம்: 07.32 - 09.02
ராகுகாலம்: 01.3[illegible] - 03.0[illegible]
(பகலுக்கும் [illegible] பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்லறிவே ஆண்டவன். எனவே நல்லறிவை அடைய முயல்வதுதான் ஆண்டவனை [illegible]

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர் சம்பளம், நியமனமில்லை

வலி தென்மேற்கு, ஒக். 1

யாழ். மாவட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் தமது நிலையை விளக்கி சமுர்த்தி அதிகார சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளனர் என்று தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 149 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் கடந்த 11-2-98 முதல் பதினான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றி வருகின்றனர்.

எட்டு மாதகாலம் பூர்த்தியான நிலையிலும் எந்தவித வேதனமும், நியமனக் கடிதமும் சமுர்த்தி அதிகார சபையினால் இவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

மாவட்ட மட்டத்தில் அரசியல் கட்சிகள் சமர்ப்பித்த பட்டியலுக்கு இணங்க யாழ். அரச அதிபரின் நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

விரைவில் உரிய நியமனக் கடிதமும், வேதனமும் அனுப்பி வைக்கப்படுமென நியமனக் கடிதத்தில் குறிக்கப்பட்டிருந்தது.

எட்டு மாதம் முடிவுற்ற நிலையிலும் எதுவுமே நடைபெறவில்லை என்று. தெரிவிக்கப்படுகின்றது.

(இ-185)

## வீதி ஓர வியாபாரத்தால் போக்குவரத்து இடைஞ்சல்

திருநெல்வேலி, ஒக். 14

திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பாகவுள்ள வீதி ஓரங்களில் பொருள்களை வைத்து வியாபாரம் செய்பவர்களால் வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டு வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

வீதி ஓரங்களில் வியாபாரம் செய்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு நல்லூர்ப் பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறு வியாபாரம் செய்பவர்களின் பெயர்ப் பட்டியலை எடுத்து அவர்களுக்கு அறிவித்துஒத்துழைப்புத் தருமாறு கேட்பது என்றும் —

வியாபாரம் செய்பவர்கள் ஒத்துழைப்பு தராதவிடத்து காவற்றுறையிடம் தொடர்பு கொண்டு சட்ட நடவடிக்கை எடுப்பது என்றும் — கடந்த வாரம் நடைபெற்ற பிரதேச சபை மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(இ-135)

## மின்சாரம்

வலிகாமம் மேற்கு, ஒக். 14

சங்கானை சித்தன்கேணி சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

(இ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரமானவையாக இருப்பினும்

# உள்ளூர் உற்பத்திப் பொருள்களை தரக்குறைவாகக் கருதும் சாபக்கேடு

## பொருளாதாரம் வளரத் தடையாக உள்ளது

சாவகச்சேரி, ஒக். 14

எமது சமூகத்தில் கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களான கைப்பணிப் பொருள்கள், பனம்பொருள்கள் என்பன தரமாக இருந்தாலும் இப்பொருள்களைத் தரக்குறைவாக சமூகத்திலுள்ளவர்கள் கருதுகின்றனர். இது ஒரு சாபக்கேடு. இப்பொருள்களின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் எமது பொருளாதார வளத்தையும் அதிகரிக்கலாம்.

அண்மையில் கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழி நிலையத்தில் நடைபெற்ற தையல், கைப்பணிப் பொருள் கண்காட்சியின் ஆரம்பவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது—

அரசசார்பற்ற நிறுவனங்களில் அறவழி நிலையமும் ஒழுங்கான செயற்பாடுகளைத் திட்டமிட்டு வகுத்து செயற்பட்டு வருகின்றது. இன்றைய சமுதாயத்தில் தொழில் வாய்ப்பற்றவர்களையும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முனைய வேண்டும். இத்திட்டத்தினை மேற்கொள்ள முதலீடு, அறிவு, சந்தை வாய்ப்பு என்பன அவசியம் என்றார்.

இந் நிகழ்வில் தலைமை வகித்து உரை நிகழ்த்திய கே. ஜி. தங்கவேல் தனது உரையில் தெரிவித்ததாவது:

அறவழி நிலையம் புதிய சமுதாயத்தைக் கட்டி அமைக்கும் பணியில் உழைத்து வருகிறது.

இந்த நிறுவனம் சமூகத்தில் உள்ள சமூகக்குறைபாடுகளை இளைய சமூகத்தின் மத்தியில் சாத்வீகப் போராட்டத்தை நடத்தித் தீர்வுகாணக் கூடிய முறையில் பாடுபட்டு வெற்றி கண்டுள்ளது.

இன்று சமுதாயத்தில் பாடசாலைக் கல்வியை முடித்து வேலைவாய்ப்பு அற்றுள்ள மாணவர்களுக்கு பல பயிற்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். தட்டெழுத்துப் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சி, பன்னவேலை, தையல், போன்ற பயிற்சித் திட்டங்களை வழங்கி வருகின்றோம்.

இது போன்ற பணிகள் விரிவுபட்டுச் செல்கின்றன. அத்துடன் 74 கிராமங்களில் அறவழிக் கிராமங்களையும் பாலர் பாடசாலைகளையும் அமைத்து பாலர்களின் கல்வித்திட்டங்களை விரிவுபடுத்தியும் வருகின்றோம்.

எம்மிடம் போதிய நிதி இல்லாவிட்டாலும் இத் திட்டங்களைச் செய்கின்றோம்.

இப்படி அவர் கூறினார்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் உரை நிகழ்த்துகையில், சுயதொழில் முயற்சிகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனம் பொருள்களை சந்தைப்படுத்துவது கஷ்டம் அல்ல. அப் பொருள்களை பனம் பொருள் அபிவிருத்திச் சபை கொள்முதல் செய்யத்தயாராக இருக்கின்றது என்றார்.

வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸ் உரை நிகழ்த்துகையில் சமுதாயத்தில் பாலர் கல்வி மேம்பாட்டுக்காக வித்திடுபவர்கள் அறவழி நிலையத்தினர்.

பாலர்கள் தான் நாளைய சமூகத்தின் உயிர்நாடிகளாக விளங்குபவர்கள்

எனவே அவர்கள் கல்வியில் நாம் அக்கறை உள்ளவர்களாக விளங்கவேண்டும் என்றார்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கினை சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ, அறவழி நிலையத்தலைவர் கே. ஜி. தங்கவேல், அறவழி நிலைய கௌரவ செயலாளர் க. ஜீவகதாஸ் பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் ஆகியோர் ஏற்றினர். அறவழி நிலைய கீதமும் இசைக்கப்பட்டது.

இறுதியாகதையற் பயிற்சி, பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இக் கைப்பணிப் பொருள்களுக்கான பயிற்சி ஆசிரியர்களான ரி. சுகந்தி. எம். மஞ்சுளா, ஆகியோர் மாணவிகளால் மலர்மாலை சூட்டியும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக நன்றியுரையை அறவழி நிலையத்தைச் சேர்ந்த எஸ். அமிர்தலிங்கம் நிகழ்த்தினார். (இ-31)

## மாணவர் பாதிப்பு

செம்பியன்பற்று, ஒக். 14

வடமராட்சி கிழக்கிலுள்ள மாமுனை அ. த. க. பாடசாலை, அம்பன் அ. மி. த. க பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ. க. த. க பாடசாலை ஆகியவற்றின் தற்காலிகக் கொட்டகைகள் வேயப்படாமல் உள்ளமையினால் இப்பாடசாலை மாணவர்கள் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். [இ 36]

## சனசமூக நிலையங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் உதவித் திட்டத்தின் கீழ் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூன்று சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கோண்டாவில் ஸ்ரீ நாராயண சனசமூக நிலையம், நல்லூர் வடக்கு சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம் என்பனவே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி சனசமூக நிலையங்களின் புனரமைப்பிற்கென ரூபா 4 லட்சத்து 91 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச செயலக உதவித்திட்டமிடற் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 14

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் க. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வீ. இராசையா சிறப்பு விருந்தினராகவும், கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

திருமதி இ. பாலசுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (இ-8)

## கசிப்பு விற்பனை அதிகரிப்பு

வட்டுக்கோட்டை, ஒக். 14

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் மீண்டும் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்து வருகின்றன. தற்பொழுது பனங்கள்ளின் உற்பத்தி குறைந்துள்ளதை அடுத்தே கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளது. (இ-12)

## 9,450 வாகனங்கள் ஒரு வருடத்தில் காப்புறுதி

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் யாழ். கிளையினால் ஒரு வருட காலத்தில் 9 ஆயிரத்து 450 வாகனங்களுக்கு காப்புறுதி வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி கிளையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் யாழ். மாவட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காப்புறுதித்திட்டங்களில் சில 1997 செப்ரெம்பர் 15ஆம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் 55 கட்டடங்களுக்கும் காப்புறுதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட 15 பிரதேச செயலர் பிரிவுகளில் காப்புறுதித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கொழும்பிலுள்ள தலைமையகத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்பொழுது வாகனக் காப்புறுதி, ஒப்பந்தக்காரர் காப்புறுதி தீ அபாயக்காப்புறுதி, தனிநபர் விபத்து காப்புறுதி, பணம் கொண்டு செல்லல் காப்புறுதி, பொருள் கொண்டு செல்லல் காப்புறுதி போன்ற திட்டங்கள் யாழ். கிளையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தீ அபாயக்காப்புறுதி வங்கிக்கடன் உள்ளவர்களுக்கு மட்டும் ஒரு கோடி ரூபா வரை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுகிறது.

களவபாயக் காப்புறுதி திட்டம் யாழ். கிளையினால் தற்பொழுது நடைமுறைப்படுத்தவில்லை.

இத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து யாழ். கிளை முகாமையாளர் திருமதி எஸ். அரியநாயகத்தினால் கொழும்பிலுள்ள தலைமையகத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## தடுப்பூசி

சுதுமலை, ஒக். 14

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை முதல் [illegible] தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது. (இ-139)


## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பரிசளிப்பு விழா - 1998

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 15 - 10 - 98 வியாழக்கிழமை
காலை 9-30 மணி

தலைவர்:
திரு. பொ. கமலநாதன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
உயர்திரு. து. வைத்திலிங்கம்
யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர்

கௌரவ விருந்தினர்:
திரு. மா. சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர்)
கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

பரிசில் வழங்குபவர்:
திருமதி ஜெ. வைத்திலிங்கம்

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(சி/5173)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் விசுவநாதர்

(உரிமையாளர்: ஸ்ரீபாலன் ஸ்ரோர்ஸ், மாத்தளை)

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் விசுவநாதர் 12 - 10 - 98 அன்று மாத்தளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தங்கம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம், (ஜேர்மனி), செல்வராணி, நாகராணி (ஜேர்மனி), நிர்மலராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுலோசனா, குலசிங்கம் (இலங்கைவங்கி 2 ஆம் கிளை, யாழ்ப்பாணம்), வித்தியானந்தன் (ஜேர்மனி), சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜித், கோபிகா, சுதன், மலர்விழி, றெஜி, தாட்சாயணி, லாவண்யா, பிரதீபா, திலீப்குமார், சுகானா, ஹம்சலா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற நடராசா, மற்றும் தில்லையம்பலம், நவரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கரத்தினம், காமாட்சி, பத்மாவதி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தில்லைராசாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-10-98) புதன்கிழமை மாத்தளையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
V S குலசிங்கம், சண்முகநாதன்
(மருமக்கள்)

73/1, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(59906)

### செல்வி வேல்சாமி ஜெயந்தி

வண்ணார்பண்ணை கட்டாதெருச் சந்தியைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி வேல்சாமி ஜெயந்தி ("வைத்தீஸ்வரா", சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) 06. 10. 1998 செவ்வாய்க்கிழமை துணுக்காயில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08. 10. 1998 வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திருமதி கௌரி வேல்சாமி,
(முன்னாள் J/சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியை.)

519, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(59912)

### மார்க்கண்டு தேவதாசன்

தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும், வவுனியா தெற்கிலுப்பைக்குளத்தில் வசித்தவரும், வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையின் நிர்வாக இயக்குநருமாகிய மார்க்கண்டு தேவதாசன் (மாறன்) கொழும்பில் 12. 10. 98 இல் காலமானார்.

அன்னார் மார்க்கண்டு, காலஞ்சென்ற அன்னபூரணம் ஆகியோரின் மகனும் சாந்தாதேவியின் கணவரும் ரேவதன், மதுவதன் ஆகியோரின் தந்தையும், இராமதாசனின் [யூரோவில்] சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [14. 10.98] புதன்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. இராமதாசன்
(சகோதரன்)

சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

[59908]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் மேலும் 35 திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 14

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் யாழ். மாவட்டத்தில் மேலும் 35 அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இத்திட்டங்கள் தொடர்பான கூட்டமொன்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், யாழ். செயலகம், ஐ. நா. அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரம் வருமாறு:-

★ குருநகர், மாகியப்பிட்டி, பருத்தித்துறை, மந்திகை, புலோலி, கைதடி—நுணாவில் போன்ற பகுதிகளில் பெண்களுக்கான சுயதொழில் கடனுதவித் திட்டம்,

★ மட்டுவில்— நுணாவில் உவர் நீர்த் தடுப்புத்திட்டம்.

★ கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, பளை சோரன்பற்று கணேச வித்தியாலயம், பளை தருமக்கேணி அ. த. க. பாடசாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் முதலிய பாடசாலைகளின் கட்டடங்கள் புனரமைப்பு.

★ பொன்னாலை, கோண்டாவில், அரியாலை, இணுவில், சுன்னாகம், சாவல்காடு, உயரப்புலம், உடுப்பிட்டி, இமையாணன் போன்ற இடங்களில் பொதுக் கட்டடங்கள் புனரமைப்பும், புதிதாக அமைத்தலும்.

★ பளை—மசார் விவசாய வீதி, கோப்பாய் கனபதியாபுலம் கூலா நெல்வயல் வீதி போன்றவை புனரமைப்பு.

★ காரைநகர், கிளுவானை கால்வாய் புனரமைப்பு.

★ நெடுந்தீவு, மாமுனை—வத்திராயன், நாகர் கோயில்—மாங்காடு போன்ற மீனவக் கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கு மீன் பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டம்.

நாகர் கோயில் மீனவர் வீதி புனரமைப்பு, மயிலிட்டி, பலாலி போன்ற பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்வு மீனவர்களுக்கான வருமான அதிகரிப்புத் திட்டம்.

★ பருத்தித்துறை, தொண்டமனாறு, சுப்பர்மடம் போன்ற இடங்களிலுள்ள மீனவர்களுக்கு கட்டுமரம் வழங்கள்,

★ பெரியகிளான், தாவடி, இணுவில், கரணவாய், நெல்லியடி ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளுக்கான சிறு கடனுதவித் திட்டம்.

★ மானிப்பாய் மரவேலை பாடசாலை புனரமைப்பு.

★ யாழ். அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் ஊடாக பால் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் ஆகியனவே அத்திட்டங்களாகும்.

இந்த 35 திட்டங்களையும் சேர்ந்து தற்பொழுது 117 அபிவிருத்தித் திட்டங்கள் ஐ. நா. தூதரகத்தினால் இங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (உ-5)


## வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து சமயப் பேரவையால் கௌரவிக்கப்பட்ட
எமது விரிவுரையாளர் இசைப் பேரரசு

**ந. வி. மு. நவரத்தினம்**
அவர்களை
அன்புடன் வாழ்த்துகின்றோம்.

முதலாம் வருட மாணவர்கள்.
இராமநாதன் நுண்கலைப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(59926)

## தவறிவிட்டது

13-10-98 ஆம் திகதி பிற்பகல் 1. 30 மணியளவில் யாழ். நவீன சந்தைக்கு முன் எனது கருமைநிற அலுவலக பாக் ஆவணங்களுடன் தவறிவிட்டது. அதை ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-

தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

மா. தியாகராசா,
[சட்டத்தரணி]
ஆனைக்கோட்டை.

(59920)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

**எஸ். சுவீந்திரனின் அன்புத் தாயார்**

12 10.98 (திங்கள்) அன்று இறைபதம் எய்தியமையை அறிந்து பெரும் கவலை அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட
கலைப்பீட மாணவர்கள்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(சி/5179)


## யோகர் சுவாமி குருபூசை

யாழ். சிவதொண்டன் நிலையத்தில் இன்று மாலை 4-30 மணிக்கு யோகர்சுவாமியின் ஆயிலியம் நட்சத்திர பூசை, வழிபாடுகள் இடம் பெறும்.

பூசையை அடுத்து யோகர் நற்சிந்தனை, பஜனை, கூட்டு வழிபாடு ஆகியவையும் இடம்பெறும். (உ-30)

★ ★ ★

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் முனவாசலில் உள்ள தேரடி அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் இன்று காலை 10-30 மணிக்கு கொழும்புத்துறை யோகர் சுவாமியின் ஆயிலியம் நட்சத்திரம் விசேட பூசை, வழிபாடுகள், யோகர் நற்சிந்தனை, பஜனை ஆகியன இடம் பெறும். (உ-30)

★ ★ ★

யோகர் சுவாமியின் ஆயிலியம் நட்சத்திர தினத்தையொட்டி இன்று மாலை 3-30 மணிக்கு சுவாமி சமாதிக் கோயிலில் விசேட பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

## கர்ப்பிணியை பாம்பு தீண்டியது

இருள் சூழ்ந்த வேளையில் வீட்டுக்குள் இருந்த விளக்கை எடுக்கச் சென்ற கர்ப்பிணிப் பெண் பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த ஞாயிறு மாலை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா உலகராணி (வயது 19) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (உ-117)

## வெள்ளைப் பிரம்பு தினம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி நாளை வியாழக்கிழமை விழிப்புலனற்றோர் விழாவினை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த விழிப்புலன் அற்றோர் சாவகச்சேரி பிரதேச செயலகத்திலிருந்து ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவர்.

கழகத் தலைவர் லயன் டாக்டர் பீ. வி. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இவ் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் (கண்பார்வை) லயன் பா. விஜயகுமாரும் கலந்து கொள்வர். (உ-117)


## இதயபூர்வ வாழ்த்துக்கள்

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றதுடன் 47 மாணவர்களைச் சித்தியெய்தச் செய்தமைக்காக ஆரம்ப காலத்தில் இருந்தே இம் மாணவர்களுக்காக உழைத்த யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர்கள், சகல ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த வாழ்த்துக்களை மீண்டுமொரு முறை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்றைய உதயனில் வெளியான வாழ்த்தில் சில ஆசிரியர்களை தவறவிட்டமைக்காக வருந்துகின்றோம்.

V. S. சிவரட்னம்

2'A', பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(59930)


## புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், ஒக். 14

வட்டுக்கோட்டை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்துக்குப் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை எதிர்வரும் 21 திகதி புதன்கிழமை முற்பகலில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் நா. திரிலோகநாதன் நட்டுவைப்பார். பிரதேச சபையின் உப- தலைவர் வே. மகேந்திரன் உட்படப் பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொள்வர். (அ)


## சைவத் தமிழ்ப் பேரரசியை வாழ்த்துகின்றேன்

♦♣♦♣♦♣♦♣♦♣

யாழ். பல்கலைக்கழகத்தால்
கலாநிதிப் பட்டம்
வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களை நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றேன்.

கலாபூஷணம்
ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்
ஆறுமுகம் சிற்பாலயம்
திருநெல்வேலி.

(சி/5180)

## சிவா புடைவை அகத்தினரின் மாபெரும் மலிவு விற்பனை

**09-10-98 இல் இருந்து 20-10-98 வரை தொடர்ந்து நடைபெறுகின்றது.**

தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்!

♥ புதிய டிசைன் சாறிவகைகள் ♥ புதிய ரகஸ்கேட் அன் பிளவுஸ் ♥ புதிய பஞ்சாபி செற்
♥ சல்வார்கிற் சோளி செற் ♥ புதிய சேட் வகைகள் ♥ வெளிநாட்டு T சேட் வகைகள் மற்றும்
♥ சேட்டிங் ♥ சூட்டிங் ♥ சீத்தை 55/- பட்டசில்க் பிளெயின் 75/- ♥ பட்டசில்க் பிறின்ட் 95/=
♥ இன்ரகூலர் பிளெயின் 95/= ♥ இன்ரகூலர் பிறின்ட் 120/= ♥ பாபிறா பிறின்ட் 125/- மற்றும்
♥ கிப்ஸ் சாறம் ♥ பூட்டு சாறம் அனைத்தும் மலிவு விலையில் வாங்க

★ **சிவா புடைவை அகம்** ★

27, பெரியகடை, யாழ்ப்பாணம். (59928)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

மாதாந்தப் பரீட்சை

ஆண்டு 3 தொடக்கம் 11 வரை.

ஆரம்பம்: 14-10-98

வெளி மாணவர்களும் தோற்றலாம்.

(59909) - நிர்வாகி



SALE! SALE!!

இதோ!

முந்துங்கள்

உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

# மகாநதி

வழங்கும்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

இத்தள்ளுபடி 19 10-98 வரை மட்டுமே!

நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடவைகளின் சங்கமம்

மகாநதியில்

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடவைகளுக்கு
ஆம்

# மகாநதி புடவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
4, நவீன சந்தை சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணிவகைகளுக்கு
பிரத்தியேக காட்சி அறைகள்

16. நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்,
1 KUF நவீன சந்தை, (மேல் மாடி) சாவகச்சேரி.

(சி/5177)



CHEAP SALE ! CHEAP SALE !!

தீபாவளி விசேட மலிவு விற்பனை!

# சீமாட்டி

(புடைவைக் கடல்)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சீமாட்டி புடைவைக் கடலின் அனைத்துப் புடைவைகளும் என்றும் எங்கும் கிடைக்காத விசேட மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

- ★ புத்தம் புதிய டிசைன்களில் சாறி வகைகள் ரூபா 260/- இலிருந்து ரூபா 700/- வரை!
- ★ கொழும்பு ஓஷானிக் இம்பெக்ஸ் அனுசரணையுடன் ஒறிஜினல் கிப்ஸ் சாரங்கள், பெனியன்கள், லேஞ்சிகள்,
- ★ பாபறா, ஜோ ஜோ, இன்ரர் கூலர், பட்டர் சில்க் செக்கு துணிவகைகள்,
- ★ சேட்டிங் சூட்டிங் வகைகள்,
- ★ வேட்டி சால்வைகள்.
- ★ இந்தியா. இந்தோனேசியா. தாய்லாந்து, சிங்கப்பூர் றெடிமேட் அயிட்டங்கள்

இன்னும் பலப்பல தினுசுகள்!

மொத்தமாகக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு!

சுபமுகூர்த்தப் புடைவைகளின் கைராசியான நிறுவனம்.

இன்றே நாடுங்கள்!

# சீமாட்டி

(புடைவைக் கடல்)

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 021 - 2196

"இலக்கம் 15. நவீன சந்தை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியில் அமைந்திருக்கும் எமது கிளையான 'மங்கை சில்க்' இலும் இதே மலிவு விற்பனை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(சி/5120)


## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கிளிநொச்சிப் பகுதியில் இனந்தெரியாத ஹெலியொன்று பறந்ததாகப் பொலீஸாருக்குத் தொலைபேசி அழைப்புக் கிடைத்ததை தடுத்து பொலீஸார் விமானப் படையினரையும் தரைப்படையினரையும் உஷார் படுத்தியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமானப் படை ஹெலிகள் கடந்த ஞாயிறு பறக்காமல் தரையில் நிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படை 'டோரா' படகு ஒன்று முதன் முதலில் தரைக்கு மேலே ஏதோவொன்று பறந்து சென்றதைப் பதிவு செய்திருந்தது. இதையடுத்தே புலிகளிடம் ஹெலிகொப்டர் இருக்கலாமென்ற ஊகம் இராணுவ வட்டாரங்களில் பரவலாக அடிபட்டது. தற்போது இது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

கடந்த வருடம் இலங்கை விமானப் படையிடமிருந்து காணாமல்போன ஹெலிகளுள் ஒன்று விடுதலைப் புலிகள் வசம் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும்—

பிரான்ஸிலிருந்து ஆறு இலகுரக விமானங்களைப் புலிகள் பெற்றிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளன என்றும் —

செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது.

(உ-3-6-10)

## எதிர்வரும் ..

(முதலாம் பக்கத் தொடர்)

யுள்ளவர்களை திருகோணமலைக்கு ஏற்றிச் செல்லவும் -

வவுனியா, மன்னாரில் இருந்து திருமலை வந்துள்ள அகதிகளை காங்கேசன்துறைக்கு அழைத்துவரவும் —

இச்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயணிகளைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று கடவைகள் இச்சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேநேரம்—

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் நிரந்தர கப்பல் சேவை ஒன்றை நடத்த முன்னோடி முயற்சியாக —

கப்பல் ஒன்றை வாடகைக்குப் பெறுவதற்கு கேள்விப் பத்திரங்கள் அடுத்த வாரம் கோரப்படவிருக்கிறன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தால் கேள்விகள் கோரப்பட்டு. அடுத்த மூன்று வாரங்களுக்குள் அது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டு, சேவை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## வெளிமாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அவசர தேவைகளுக்கு கொழும்பு செல்ல வேண்டியவர்கள் விவரங்களை தமது அலுவலகத்தில் பதியுமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கடந்த வெள்ளியன்று கோரியதையடுத்து நேற்று வரை 2 ஆயிரத்து 500 பேர் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்துள்ளனர்.

இப் பதிவு வேலைகள் தொடர்ந்து சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

(உ-3)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்தார்.

கப்பல் பொறியியலாளரான ஜூட் மனோகரனின் கப்பல் பம்பாயில் தரித்த சமயம் அவர் இப்பெண்ணை — கடந்த மாதம் திருமணம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

தேனிலவுக்காக இலங்கைக்கு வந்த இத்தம்பதியர் கொழும்பு முகத்துவாரம் காக்கைதீவுப் பகுதியில் தங்கியிருந்து, தினமும் மாலையில் கடற்கரையில் காலாற நடந்து சென்றதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு கடந்த ஞாயிறு இரவு கணவனுடன் இப்பெண் நடந்து சென்றபோது இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கணவனைத் தாக்கிவிட்டு அப்பெண்ணைக் கடத்திச் சென்றது.

பொலீஸாரும், இராணுவத்தினரும் மோப்ப நாய்களின் உதவியுடன் காக்கை தீவுப் பகுதியில் இரு தினங்களாக மேற்கொண்ட தேடுதலின் பேரில் நேற்றுக் காலை அந்தப் பெண்ணின் சடலம் சேற்றுப் பகுதிக்குள் இருந்து மீட்கப்பட்டது.

இது தொடர்பாக நால்வர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் சம்பவ இடத்துக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் ஒருவர் பொலீஸாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாவது:-

சம்பவ தினம் அப்பகுதியில் நடமாடிய இத்தம்பதியினரைக் கண்டோம். கணவனை சைக்கிள் செயின் மற்றும் பொல்லுகளால் தாக்கிவிட்டு அவரது மனைவியைக் கட்டிப் பிடித்து இழுத்து வந்து ஓட்டோ ஒன்றில் ஏற்றினோம்.

பின்னர் சொற்ப தூரம் சென்று கழுத்தளவு தண்ணீர் கொண்ட கடற் பகுதியால் அவரைக் கடத்தி மறுபகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்றோம்.

அங்கு வைத்து விரும்பியவாறு மூவரும் அவருடன் பாலியல் வல்லுறவு கொண்டோம். பின்னர் கயிற்றால் அவரது கழுத்தை இறுக்கிக் கொலை செய்து சேற்றுக்குள் எறிந்து விட்டுச் சென்றோம்." — என்று தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஒருவர் தாம் மது அருந்தும் போது எப்படியாவது இளம் பெண் ஒருவரைக் கற்பழிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவதாகத் தெரிவித்தார்.

இப்படியான சம்பவங்கள் அப்பகுதியில் முன்னரும் இடம்பெற்றுள்ளதால், அச்சம்பவங்களுக்கு இக்கோஷ்டி தான் காரணமா என்பது குறித்துத் தீவிர விசாரணை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காக்கைதீவுப் பகுதியில் பெரும் ஐ. ஆர். ஸிக்களான இந்தக் கும்பல், அப்பகுதியில் உள்ள தமிழர் வீடுகளுக்குள் இரவு நேரத்தில் புகுந்து அங்குள்ளவர்களை மிரட்டி, படையினர் போன்று வீட்டுக்காரர்களின் அடையாள அட்டையைச் சோதித்து வருவது வழக்கம் என்றும் —

காக்கைதீவுப் பகுதியில் ஏற்கனவே ஓர் தமிழ் இளம் பெண்ணை இக்குழுவினர், கெடுத்துள்ளதாகவும் —

சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ் ..

(முதலாம் பக்கத் தொடர்)

தமது செயற்பாட்டைப் பகுதியாக நிறுத்தியிருந்தன என்பது தெரிந்ததே.

நேற்றுக் கிடைத்த கடிதத்தை அடுத்து நீதிமன்றச் செயற்பாடுகளை முற்றாகக் கைவிடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் நிலைமையை ஒன்று கூடி ஆராய்ந்த பின்னர் இத்தகைய முடிவை எடுத்ததாகக் கூறப்பட்டது.

இந்த விடயம் குறித்து மல்லாகம் நீதிவானும் யாழ். மேலதிக நீதிவானுமான எம். திருநாவுக்கரசுவிடம் வினவியபோது—

தமக்குக் கிடைத்த கடிதத்தை அடுத்துத் தாங்கள் இவ்வாறு முடிவு செய்ததாகக் கூறினார்.

"நெருக்குதல் அதிகமானால் எனது பணியைக் கைவிட்டு ஓய்வு பெற்றுச் செல்வேன். சமூகக் கடப்பாட்டைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியதும் எனது பொறுப்பாகும்." — என்றும் அவர் குறிப்பிட்டார்.

(உ-3-139)

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பு அதிகாரி எஸ். இரத்தினசிங்கத்தையும் —

நாலாவதுமாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாநகர சபை காவலாளிகளான விமலச்சந்திரன், தேவசிங்கம், அலுவலக உதவியாளரான சண்முகபதி ஆகியோரையும்—

அவர்கள் பார்த்து நலம் விசாரித்தனர்.

பிரதி மேயருடன் மாநகர சபை உறுப்பினர்களான எஸ். எம். கனேந்திரன், த. முருகேசன், ச. அரவிந்தன், க. சின்னத்துரை ஆகியோரும் சென்றிருந்தனர்.

## வாதுவ..,

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டன என்றும்—

யாழ். அரச அதிபர் சொன்னார்.

கப்பலை பயணிகள் சேவைக்குப் பயன்படுத்துவதாயின் அதற்குரிய காப்புறுதி செய்யப்பட வேண்டும் என்று கப்பலின் நிறுவன அதிகாரிகள் தெரிவித்ததாகவும்—

அத்தகைய காப்புறுதியைச் செய்வதற்கு பெருந்தொகைப் பணம் காப்புறுதியாகச் செலுத்த வேண்டும் என்பதால், இக்கப்பலில் பயணிகளை அனுப்பும் முயற்சி கைவிடப்பட்டது என்றும்—

ஆகையால் 'வாதுவ' கப்பல் பயணிகளை ஏற்றாமலேயே கொழும்பு திரும்பும் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

[உ-3-7-175]


# NIRU TUITION CENTRE

KONDAVIL

A/L 99 DAY

APPLIED & PURE

ஆரம்பம்:- 15. 10. 98

வியாழன் 10. 30 மணி

ஆசிரியர் A. பத்மநாதன்

(59900)



இப் பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org